ISSN: 2582–5518







புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351







செவ்வாய் ❖ டிசம்பர். 12, 2023 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 68 ❖ ரூ.10

ஜம்மு காஷ்மீருக்கான 370 சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டது செல்லும் ; உச்சநீதிமன்றம்

# தீர்ப்பு

## ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு 3 விதமான தீர்ப்புகளை வழங்கி அதிரடி

புதுடெல்லி : டிச. 12, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அஸ்தஸ்து வழங்கும் 370வது பிரிவை மத்திய அரசு கடந்த 2019ம் ஆண்டுரத்து செய்தது. இந்த நடவடிக்கையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரித்தது. அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் ஜம்மு காஷ்மீர் தொடர்பான வழக்கில் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சஞ்சீவ் கன்னா, பி.ஆர்.கவாய் மற்றும் சூரிய காந்த் ஆகியோர் கொண்ட அரசியல் சாசன அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது.



அதன்படி, ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் 370 சட்டப்பிரிவை ரத்து செய்தது சட்டப்படி செல்லும் என்று உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு பெரும்பான்மை தீர்ப்பு வழங்கியுள்ளது. அந்த தீர்ப்பில், "சட்டப்பிரிவு 370 ஒரு தற்காலிக ஏற்பாடு என நாங்கள் கருதுகிறோம். 370 சட்டப்பிரிவு மாநிலத்தில் போர் நிலைமைகள் காரணமாக ஒரு இடைக்கால ஏற்பாடாக இருந்தது. ஜம்மு காஷ்மீர் மாநிலம் மற்ற மாநிலங்களில் இருந்து வேறுபட்ட இறையாண்மையை கொண்டிருக்கவில்லை. ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியே. ஜம்மு காஷ்மீருக்கான அரசியல் நிர்ணய சபை ஒப்புதல் இல்லாமல் முடிவு எடுக்கும் அதிகாரம் குடியரசு தலைவருக்கு உள்ளது. குடியரசுத் தலைவர் ஆட்சி அங்கு இருக்கும் போது மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை கேள்விக்கு உள்ளாக்க முடியாது.

ஜம்மு காஷ்மீரின் அரசியல் சட்டத்தில் இறையாண்மை குறித்து எதுவும் கூறவில்லை. ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் சேரும் போது, அதன் இறையாண்மை மொத்தமாக இந்தியாவிடம் ஒப்படைத்துவிட்டது. ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் சேரும் போது, அதற்கு தனி இறையாண்மை வழங்கப்படவில்லை. 370வது பிரிவை ரத்து செய்ய ஜம்மு காஷ்மீர் மாநில அரசின் ஒப்புதல் தேவையில்லை. ஜம்மு காஷ்மீரை 2 யூனியன் பிரதேசங்களாக பிரித்தது செல்லும். ஜம்மு காஷ்மீருக்கு அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும்,"என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படை சிறைபிடித்த மீனவர்கள்

## 25 பேரை மீட்கக் கோரி மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

கொழும்பு, டிச. 12-

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்க தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் கடந்த டிசம்பர் 9ம் தேதியன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த 25 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது 3 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் இதுபோல தொடர்ந்து கைது செய்யப்பட்டு வரும் நிலையில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும்





உடனடியாக மீட்க உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில், IND-TN-06-MM- 7675 பதிவெண் கொண்ட விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 12 மீனவர்களும், IND-PY-PK-MM-1499 என்ற பதிவெண் கொண்ட விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம் மயிலாடுதுறை மற்றும் காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 13 மீனவர்களும், டிசம்பர் 9ம் தேதியன்று இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என்று கவலைபடத் தெரிவித்துள்ளார்.

அதோடு, IND-TN-10-MM-558 என்ற பதிவெண் கொண்ட மற்றொரு மீன்பிடிப் படகு இலங்கை கடற்படையின் ரோந்துக் கப்பலால் சேதப்படுத்தப் பட்டுள்ளதையும் முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவது, நமது மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தி வருவதாக தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்க உரிய நடவடிக்கைகளை இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மேற்கொள்ள உத்தரவிடுமாறு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை கேட்டுக் கொண்டுள்ளார்.

## புதுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம் உலகப்புகழ் பெறும் கல்வியமைச்சர் புகழாரம்





புதுக்கோட்டை

புதுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம் உலகப்புகழ் பெறும் என்று தமிழக கல்வியமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி புகழாராம்சூட்டியுள்ளார்.

புதுக்கோட்டை தமிழ்ச்சங்கம் தொடக்கவிழா, மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழாவானது புதுக்கோட்டை சத்தியமூர்த்தி நகரில் உள்ள மகாராஜா மஹாலில் நேற்று நடைபெற்றது. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஸ் பொய்யாமொழிபாரதியார் திருவுருவபடத்தைத்திறந்து வைத்தும்,புதுக்கோட்டைத் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்கி வைத்தும் விழாப்பேருரை நிகழ்த்தினார். புதுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம் உலகிலுள்ள மற்ற தமிழ்ச்சங்கங்களை விட மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, உலகப்புகழ் பெறும் என்று புகழாராம் சூட்டினார். பாரதியார் விழாக்களில் இந்த விழா மிகவும் தனித்துவம் மிக்கது. 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாரதியாராக வேடமணிந்து வந்தது, பாரதியைப் பார்த்தது போல மனமகிழ்ச்சியைத் தந்தது. பெருமைமிகு புதுக்கோட்டைத் தமிழ்ச்சங்கத்தை நான் தொடங்கி வைத்ததில் பெருமையடைகிறேன் என்றும் பேசினார்.

புதுக்கோட்டைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் கவிஞர் தங்கம் மூர்த்தி தலைமையுரையில், இச்சங்கம் எல்லோர்க்கும் பொதுவானது தமிழை, தமிழறிஞர்களைக் கொண்டாடும் என்றார். கவிஞர் வெங்கடேசன் எழுதிய "நான் சந்தித்த மனிதர்களில் - கவிஞர் தங்கம் மூர்த்தி" என்ற நூலை, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் வெளியிட அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் சொ.சுப்பையா பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். சிகரம் சதீஷ்குமார் புதுக்கோட்டை தமிழ்ச்சங்கம் தொடங்கப்பட்டதன் குறிக்கோள்களை நோக்கவுரையாக ஆற்றினார்.

தமிழ்ச்செம்மல் விருது பெற்ற சந்திரன் மற்றும் தூய தமிழ்ப்பற்றாளர் விருது பெற்றசிவநந்தினிவிழாவில் கௌரவிக்கப்பட்டனர். விழாவில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, மூத்த வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், ஞானாலயா ப.கிருஷ்ணமூர்த்தி, முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். விழாவிற்கு வருகைதந்த அனைவருக்கும் பாரதியாரின் புகைப்படம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் சௌமியா குழுவினரால் பாரதியார் பாடல்கள் பாடப்பெற்றது. முன்னதாக, செயலாளர் மகாசுந்தர் வரவேற்புரையாற்ற, துணைச்செயலாளர் பீர்முகமது நன்றி கூறினார். இவ்விழா ஏற்பாடுகளை புதுக்கோட்டைத் தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகிகள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



▶ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் சார்பில், மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, வழங்கினார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் உள்ளார்.




# இன்று

12 12 2023





சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் பிறந்த நாள்

சக வருடம் 1945 மார்கழி 21

தேங்காய் எண்ணெய் கற்பூரம் கலந்து காய்ச்சி நெஞ்சில் தடவினால் சளி குறையும்

| சோபகிருது கார்த்திகை 26 | DEC - TUE செவ்வாய் | ஜமா அத்துல் அவ்வல் 28 அமாவாசை 346 / 019 | இராசிபலன் |
|---|---|---|---|

சதுர்த்தசி 00.05 (கா. 06.22) அமாவாசை 58.42 (கா. 05.49) அனுஷம் 15.23 (மா. 12.29) தியாஜ் 29.15 அகஸ் 28.33 சித்த. சர்வ அமாவாசை. அவமாகம். ஸ்ரீரங்கம் நம்பெருமாள் திருநெடுந்தாண்டகம். குரங்கனி முத்துமாலையம்மன் பவனி. கொடிய நகக.

| நல்லநேரம் | | கௌரி ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை: | 7.45-8.45 | 10.45-11.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை: | 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; விருச்சிக லக்னம் இருப்பு நா. 0 வி. 52; சந்திராஷ்டமம் பரணி கார்த்திகை; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.20

இன்று செய்ய வேண்டியதை நேற்றே முடி

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | அச்சம் |
| ரிஷபம் | சுகம் |
| மிதுனம் | ஆக்கம் |
| கடகம் | சலனம் |
| சிம்மம் | ஆர்வம் |
| கன்னி | சிரமம் |
| துலாம் | ஊக்கம் |
| விருச்சிகம் | நலம் |
| தனுசு | நிறைவு |
| மகரம் | இரக்கம் |
| கும்பம் | ஆதாயம் |
| மீனம் | புகழ் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்








| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,765 | Rs. 6,235 |


# சீர்காழியில் ஓய்வு பெற்ற ரயில்வே போலீசார் வீட்டில் 50 பவுன் நகைகள், ரூ. 2 லட்சம் பணம் கொள்ளை – போலீசார் விசாரணை



சீர்காழி , டிச. 12–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மதீனா நகரில் வசிப்பவர் இவர் ஓய்வு பெற்ற ரயில்வே போலீசார் நடராஜன் 78. இவர் தனது மனைவி தமிழ்ச்செல்வி மற்றும் இரு மகள்கள், பேரக் குழந்தைகளோடு வசித்து வருகிறார்.

நடராஜன் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் வீட்டில் கீழ் தளத்திலும், மேல் தளத்தில் இவரது மகள் மற்றும் பேரக்குழந்தைகள் தங்கி உள்ளனர். இந்நிலையில் நேற்று இரவு நடராஜன் அவரது மனைவி உள்ளிட்ட அனைவரும் கீழ் தளத்தை பூட்டிவிட்டு மேல் தளத்தில் தூங்கிவிட்டு காலை கீழே வந்த போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

பின்னர் வீட்டுக்கு உள்ளே சென்று பார்த்த போது வீட்டில் இருந்த பீரோ உடைக்கப்பட்டு பொருள்கள், ஆடைகள் சிதறி கிடந்தது. மேலும் பீரோவில் இருந்த 50 சவரன் நகை மற்றும் 2 லட்சம் பணம் கொள்ளையடிக்கப்பட்டது தெரிய வந்தது.

இதுகுறித்து நடராஜன் சீர்காழி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று கொள்ளை போன இடத்தை பார்வையிட்டு விசாரணை நடத்தினர். தகவல் அறிந்த மாவட்ட எஸ்பி, கைரேகை நிபுணர் மற்றும் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டது.

சீர்காழி போலீசார் வழக்கு பதிந்து அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கர்நாடகாவில் எந்த நேரத்திலும் ஆட்சி மாற்றம் ஏற்படலாம் – அதிர்ச்சி அளிக்கும் குமாரசாமி



பெங்களூர் : டிச. 12–

"கர்நாடகாவில் எந்த நேரத்திலும் ஆட்சி மாற்றம் நிகழலாம்" என மதச்சார்பற்ற ஜனதா தள தலைவரும், கர்நாடகா முன்னாள் முதல்வருமான ஹெச்.டி.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

கர்நாடகா மாநிலம், ஹாசனில், மதச்சார்பற்ற ஜனதா தள தலைவரும், முன்னாள் முதல்வருமான ஹெச்.டி.குமாரசாமி செய்தியாளர்களிடம் கூறுகையில், "காங்கிரஸ் ஆட்சியில் எதுவும் சரியாக இல்லை. இந்த ஆட்சி எப்போது கவிழும் என என்னால் கணிக்க இயலாது. ஆனால் ஆட்சியில் உள்ள முக்கிய அமைச்சர் ஒருவர் தன் மீதான, மத்திய அரசு கையில் எடுத்துள்ள வழக்கு விசாரணையிலிருந்து தப்புவதற்காக காங்கிரஸிலிருந்து விலகி, பாஜகவில் சேர உள்ளார். அவர் தன்னுடன் 50 முதல் 60 எம்எல்ஏக்களுடன் பாஜகவுக்கு அழைத்து வர உள்ளார். பாஜக தலைவர்களுடன் இதற்கான பேச்சுவார்த்தை தற்போது நடைபெற்று கொண்டிருக்கிறது" என்றார்.

காங்கிரஸிலிருந்து வெளியேற இருக்கும் அந்த முக்கிய அமைச்சர் யார் என குமாராசாமியிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பியதற்கு, "முக்கிய தலைவர் ஒருவரிடமிருந்து இந்த நடவடிக்கையை எதிர்பார்க்கலாம். சிறிய தலைவரிடம் அல்ல" என தெரிவித்தார்.

மேலும், எப்போது வேண்டுமானாலும், மகாராஷ்டிராவில் நிகழ்ந்ததைப் போல (ஆட்சி மாற்றம்) கர்நாடகாவிலும் நிகழலாம். அரசியல்வாதிகள் சித்தாந்தத்தை எல்லாம் பின்னால் வைத்துவிட்டு, தங்கள் வசதிக்கு எது உகந்ததோ அதனை தேர்வு செய்வதால் இதுபோன்ற அரசியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று குமாராசாமி கூறினார்.

224 சட்டப் பேரவை தொகுதிகளை கொண்ட கர்நாடகாவில் தற்போது காங்கிரஸ் ஆட்சியில் உள்ளது. அக்கட்சியில் 135 எம்எல்ஏக்கள் உள்ளனர். பாஜகவுக்கு 66 எம்எல்ஏக்களும், மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கு 19 எம்எல்ஏக்களும் உள்ளனர்.

குமாரசாமியின் மதச்சார்பற்ற ஜனதா தளம், பாஜக கூட்டணியில் உள்ளது. குமாரசாமி, குறிப்பிடும் அந்த காங்கிரஸ் தலைவர் தற்போதைய துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தான் என அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.






### சட்டப்பிரிவு 370

# "உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்கிறேன்" மூத்த காங்கிரஸ் தலைவர் கரண் சிங்



புதுடெல்லி : டிச. 12–

சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டது செல்லும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்பதாக காங்கிரஸ் மூத்த தலைவரும், காஷ்மீர் மகாராஜா ஹரிசிங்கின் மகனுமான கரண் சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டப்பிரிவு 370 தற்காலிகமானதே என்றும், எனவே அதனை ரத்து செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு என்றும் உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்துள்ள கரண் சிங், "இந்த தீர்ப்பை வரவேற்கிறேன். மத்திய அரசு என்ன செய்ததோ அது சட்டப்படி செல்லும் என்பது உறுதியாகி உள்ளது. ஜம்மு காஷ்மீருக்கு விரைவாக மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியைக் கேட்டுக்கொள்கிறேன்.

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு ஜம்மு காஷ்மீரில் உள்ள குறிப்பிட்ட சிலருக்கு மகிழ்ச்சியை அளித்திருக்காது. அவர்களுக்கு எனது பணிவான வேண்டுகோள் என்னவென்றால், இந்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தவிர்க்க முடியாதது. ஏனெனில், உச்ச நீதிமன்றம் இதனை உறுதிப்படுத்தி இருக்கிறது. தேவையில்லாமல், சுவற்றில் முட்டிக்கொள்வதில் அர்த்தம் இல்லை. அவர்கள் தங்கள் சக்தியை அடுத்த தேர்தலில் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்மறை எண்ணங்களை விடுத்து தேர்தலை எதிர்கொள்வதற்கு மக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில், உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு ஏமாற்றம் அளித்திருப்பதாக ஜனநாயக முற்போக்கு சுசந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளார்.

### பணமோசடி வழக்கு

# ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரனுக்கு அமலாக்கத் துறை 6–வது முறையாக சம்மன்



ராஞ்சி, டிச. 12–

நிலமோசடி தொடர்பான பண மோசடி வழக்கில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி, ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரனுக்கு அமலாக்கத் துறை புதிய சம்மன் அனுப்பியுள்ளதாக நேற்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர் இன்று ராஞ்சியில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக விபரம் அறிந்தவர்கள் தெரிவித்தனர். ஜார்க்கண்ட் முதல்வருக்கு அமலாக்கத் துறையால் அனுப்பட்ட 6 வது சம்மன் இது, என்றாலும் அமலாக்கத் துறையின் நடவடிக்கையில் இருந்து விலக்கு கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்ததால் அவர் பதவி விலகவில்லை.

சுரங்கங்களின் உரிமையை சட்டவிரோதமாக மாற்றும் மிகப்பெரிய மோசடி ஜார்க்கண்டில் நடப்பதாக அமலாக்கத் துறை குற்றம்சாட்டியிருந்தது. இந்த வழக்கில் இதுவரை, ஜார்க்கண்ட் சமூகநலத்துறை இயக்குநராகவும், ராஞ்சியின் ஆணையராகவும பணியாற்றிய 2011ம் வருட பேட்ச் ஐஏஎஸ் அதிகாரியான சாவி ராஜன் உட்பட 14 பேரை அமலாக்கத்துறை கைது செய்திருக்கிறது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரான 48 வயது ஹேமந்த் சோரன், கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் சுரங்க முறைகேடு தொடர்புடைய மற்றொரு பணமோசடி வழக்கில் விசாரணை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேமுதிக தலைவர் விஜயகாந்த் குணமடைந்து மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்

### மருத்துவ அறிக்கை வெளியீடு



சென்னை : டிச. 12–

சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து தேமுதிக தலைவர் விஜயகாந்த் வீடு திரும்பினார்.

விஜயகாந்த் பூரண குணமடைந்து நேற்று வீடு திரும்பியதாக மியாட் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது. நடிகரும், தேமுதிக கட்சியின் தலைவருமான விஜயகாந்த், நவம்பர் 18ஆம் தேதி உடல் நலக்குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சளி காய்ச்சல் மற்றும் இருமல் காரணமாக விஜயகாந்த் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வழக்கமான பரிசோதனைக்காகதான் விஜயகாந்த் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முதலில் தகவல் வெளியானது.

பின்னர், விஜயகாந்தின் உடல்நிலை சீராக இல்லை என்றும் அவருக்கு நுரையீரல் சிகிச்சைக்கான உதவி தேவைப்படுவதாகவும் தெரிவித்தது. அதுமட்டுமின்றி மேலும் 14 நாட்களுக்கு விஜயகாந்துக்கு மருத்துவமனையிலேயே சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்றும் மருத்துவமனை அறிக்கை தெரிவித்தது. இதனிடையே விஜயகாந்த் பூரண குணமடைய தொண்டர்கள், ரசிகர்கள் என பலரும் பிரார்த்தனை செய்தனர். இந்த நிலையில், தேமுதிக தலைவர் விஜயகாந்த் பூரண குணமடைந்து மருத்துவமனையில் இருந்து விடு திரும்பியதாக மியாட் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

# புயல் நிவாரணத் தொகையை வங்கிக் கணக்கில் செலுத்தக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு



சென்னை : டிச. 12–

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத் தொகையை ரேஷன் கடைகள் மூலம் ரொக்கமாக வழங்காமல், வங்கிக் கணக்கில் செலுத்த தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், ஓய்வுபெற்ற ராணுவவீரர் ராமதாஸ் என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனுவில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 6,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்த தொகையை நேரடியாக வங்கி கணக்கில் செலுத்த உத்தரவிட வேண்டும். தமிழக அரசு நிவாரணத் தொகை வழங்குவது பாராட்டக்குரியது. அந்தத் தொகையை ரேஷன் கடைகள் மூலம் அல்லாமல் நேரடியாக கொடுக்க வேண்டும்.

ரேஷன் கடைகள் மூலம் ரொக்கமாக கொடுப்பதால், அதிகளவில் முறைகேடு நடக்க வாய்ப்பு உள்ளது. இதனால் உண்மையாகவே பாதிக்கபட்டவர்களுக்கு நிவாரண நிதி கிடைக்காமல் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பல்வேறு நலத்திட்டங்களுக்கான தொகையை அரசு, நேரடியாக வங்கி கணக்கில் செலுத்தி வருகிறது. எனவே, இந்த நிவாரணத் தொகையையும் வங்கி கணக்கில் செலுத்துவதில் அரசுக்கு எந்தவிதமான சிரமும் இருக்காது. எனவே, நிவாரணத் தொகையை நேரடியாக கொடுக்காமல், வங்கிக் கணக்கில் செலுத்த அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மக்கள் பாதுகாப்பில் அதிகாரிகள் அதிக அக்கறை செலுத்த வேண்டும்

### உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவு



மதுரை : டிச. 12–

மக்கள் பாதுகாப்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ். மங்கலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் கலந்தர் ஆசிக், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில்: "ஆர்.எஸ். மங்கலம் பேரூராட்சியில் பல ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். பேரூராட்சியில் 4 மேல் நிலை நீர் தேக்க தொட்டிகள் உள்ளன. இந்த தொட்டிகளில் இருந்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

இந்த 4 தொட்டிகளும் 1999-வது ஆண்டில் கட்டப்பட்டவை. தற்போது மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளன. தொட்டி அருகே அரசுப் பள்ளிகள், குடியிருப்புகள் உள்ளன. இதனால் சேதமடைந்த நிலையில் உள்ள 4 மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளை இடித்து புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளை கட்ட உத்தரவிட வேண்டும்." இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்து தலைமை நீதிபதி கங்கா புர்வாலா, நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி அமர்வு பிறப்பித்த உத்தரவு: "கிராம மக்கள், மாணவர்களின் பாதுகாப்பில் அதிகாரிகள் பொதுவாகவே அதிக அக்கறை செலுத்த வேண்டும். குடிநீர் தொட்டிகள், கட்டிடங்களின் உறுதித்தன்மை குறித்து நீதிமன்றம் ஆராய்ச்சி செய்ய முடியாது. எனவே மேல் நிலை நீர் தேக்க தொட்டியின் உறுதித்தன்மை குறித்து தொழில் நுட்ப நிபுணர்கள் உதவியுடன் ஆய்வு செய்ய வேண்டும்.

தொழில்நுட்ப நிபுணர்கள் அளிக்கும் அறிக்கை அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தொட்டிகள் உறுதியாக இருந்தால் அவற்றை இடிக்க வேண்டியதில்லை. தொழில்நுட்ப வல்லுநர்கள் 3 மாதத்தில் குடிநீர் தொட்டிகளை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும். அந்த அறிக்கை அடிப்படையில் உரிய முடிவெடுக்க வேண்டும்." என்று தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டுள்ளது.

# "காங்கிரஸ் குறித்த உள்துறை அமைச்சரின் குற்றச்சாட்டு துரதிர்ஷ்டவசமானது" – மாணிக்கம் தாகூர்

புதுடெல்லி : டிச. 12, காங்கிரஸ் எம்பி தீரஜ் சாகுக்கு சொந்தமான இடங்களில் வருமானவரிச் சோதனை நடந்து வரும் நிலையில், உள்துறை அமைச்சர் காங்கிரஸை ஊழலுடன் தொடர்புபடுத்தி பேசியது துரதிர்ஷ்டவசமானது என்று அக்கட்சி எம்.பி. மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மாணிக்கம் தாகூர், "உள்துறை அமைச்சர் இப்படி பேசியிருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. அங்கே ஊழல் எதுவும் இல்லை. அதில் ஊழல் எங்கே இருந்து வருகிறது. அவர் ஒரு காங்கிரஸ் எம்.பி. அவர் சொந்தமாக தொழில் செய்து வருகிறார், அவருடைய தொழிலைப் பற்றி அவர் விளக்கமளிக்க வேண்டும். அவர் அமைச்சரோ அல்லது அரசு இயந்திரத்தில் அதிகாரம் மிக்கப் பதவியிலோ இல்லை. கடந்த 40 ஆண்டுகளாக தொழில் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கென தனியாக தொழில் இருக்கிறது என்று கூறியவர், நரேந்திர தோமரின் மகனின் ரூ.500 கோடி பேரம் குறித்த வழக்கு என்னவானது" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னதாக காங்கிரஸ் எம்பி வீட்டில் நடந்த வருமானவரித்துறை சோதனை பற்றி பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, "மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. சுதந்திரத்துக்குப் பிறகு ஒரு எம்.பி. வீட்டில் இருந்து இவ்வளவு பணம் கைப்பற்றப்படுவது இதுவே முதல்முறை. கோடிக்கணக்கான பணம் கைப்பற்றப்பட்டிருக்கிறது ஆனால் ஒட்டுமொத்த இந்தியா கூட்டணிக் கட்சிகளும் இந்த ஊழல் விவகாரத்தில் மவுனமாக இருக்கிறது.



ஊழல் என்பது காங்கிரஸின் இயல்பிலேயே இருப்பதால் அக்கட்சி மவுனமாக இருக்கிறது. ஆனால் ஐக்கிய ஜனதாதளம், ராஷ்ட்ரீய ஜனதாதளம், திமுக மற்றும் சமாஜ்வாதி கட்சி எல்லாம் அமைதியாக இருக்கின்றன.

விசாரணை அமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று மோடிக்கு எதிராக ஏன் பிரச்சாரம் செய்யப்பட்டது என்று எனக்கு இப்போது புரிகிறது. அவர்களின் ஊழல் குறித்த ரகசியங்கள் வெளிப்பட்டு விடும் என்பதால் அவர்கள் அவ்வாறு செய்துள்ளனர்" என்று கூறியிருந்தார்.

இதனிடையே சிவசேனா (உத்தவ் அணி) எம்பி பிரியங்கா சதுர்வேதி, "காங்கிரஸ் எம்.பி. தீரஜ் சாகுவின் வணிக நலன்களுக்காக எதிர்க்கட்சிகளை குற்றம்சாட்டுவது அநீதியானது. தீரஜ் சாகுவுக்கு ஆதரவாக நிற்பது என்பது அவரின் செயல்களை ஆதரிப்பதாக அர்த்தம் இல்லை. அவர் பாஜகவில் சேர்ந்திருந்தால் அவரது குற்றங்கள் அனைத்தும் துய்மையாக்கப்பட்டிருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

பின்னணி : ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியை சேர்ந்தவர் தீரஜ் குமார் சாகு. காங்கிரஸ் சார்பில் 3 முறை மாநிலங்களவை எம்.பி.யானார். இந்நிலையில், ஒடிசாவின் பொலாங்கிர் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பால்டியோ சாகு சன்ஸ் அண்ட் குரூப் நிறுவனத்தின் பங்குதாரராக தீரஜ் குமார் சாகு உள்ளார். இதன் கிளைகள் ஜார்க்கண்ட், மேற்கு வங்கத்தில் செயல்படுகின்றன. பவுத் டிஸ்டிலெரி சார்பில் ஒடிசாவில் மட்டும் 250 மதுக்கடைகள் நடத்தப்படுகின்றன. இந்தியாவின் மிகப்பெரிய மதுபான ஆலைகளில் இதுவும் ஒன்று.

கடந்த 6-ம் தேதி ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் உள்ள தீரஜ் குமார் சாகு எம்பியின் வீடு மற்றும் அவரது சொந்தமான அலுவலகங்கள் என 43 இடங்களில் ஒரே நேரத்தில் சோதனை நடத்தப்பட்டது. இதில் இதுவரை ரூ.318 கோடிக்கும் அதிகமான ரொக்க பணம் கைப்பற்றப்பட்டு உள்ளது. மேலும் ரூ.150 கோடி மதிப்புள்ள தங்க, வைர நகைகளும் கைப்பற்றப்பட்டு உள்ளன.

# தரங்கம்பாடி-மயிலாடுதுறை இடையே ரயில் போக்குவரத்தை மீண்டும் துவக்கிடக்கோரி பொதுக்கூட்டம்





திருக்கடையூர், டிச.12-
மயிலாடுதுறை-தரங்கம்பாடி இடையே போக்குவரத்து சேவையாற்றிய ரயில் போக்குவரத்தை மீண்டும் இயக்கி காரைக்கால் வரை சேவையை நீட்டிக்க வேண்டுமென வலியுறுத்தி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் டிசம்பர் -08 அன்று துவங்கி மாவட்டம் முழுவதும் 250 கி.மீ தொலைவு தூரம் பயணித்து கோரிக்கை முழக்க பிரச்சாரம் செய்த சைக்கிள் பிரச்சார பேரணி ஞாயிறன்று மாலை திருக்கடையூரில் பொதுக்கூட்டத்துடன் நிறைவடைந்தது.

சன்னதி வீதியில் நடைப்பெற்ற பொதுக்கூட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஐயப்பன் தலைமை வகித்தார்.மாவட்ட பொருளாளர் தேவேந்திரன், மாவட்ட துணைசெயலாளர் குமரேசன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சபீர் அகமது, டி.வி குமார், தரங்கம்பாடி ஒன்றிய செயலாளர் பவுல் சத்தியராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றிய சிறப்புகளை சிபிஎம் மாநிலக்குழு உறுப்பினரும், கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினருமான எம். சின்னத்துரை, திமுக மாவட்ட செயலாளரும், பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா. எம், முருகன், சிபிஎம் மாவட்ட செயலாளர் பி.சீனிவாசன், காங்கிரஸ்மாவட்ட தலைவரும், மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.ராஜகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாநில செயலாளர் ஏ.வி.சிங்காரவேலன், மாநில தலைவர் எஸ். கார்த்திக்,முன்னாள் மாநில தலைவர் ஏ.ரவிச்சந்திரன், மாவட்ட செயலாளர் ஏ.அறிவழகன், மாநில செயற்குழு உறுப்பினர் என். ஆனந்தி, இந்திய மாணவர் சங்க மாவட்ட செயலாளர் மணி பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் முன்னாள் ரயில்வே குழு உறுப்பினரும், திருக்கடையூர் முன்னாள் ஊராட்சி தலைவரும், திமுக மத்திய ஒன்றிய செயலாளர் அமுர்த.விஜயகுமார், தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அப்துல்மாலிக், பல்கலைக்கழக ஆசிரியர் சங்க மாநில பொருளாளரும், பேராசிரியருமான முனைவர். சேவியர் செல்வக்குமார், திருக்கடையூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயமாலதி சிவராஜ், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றிய துணைப்பெருந்தலைவர் மைனர் பாஸ்கர், திமுக இளைஞரணி அமைப்பாளர் இரா.செந்தில் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் பொதுக்கூட்டத்தில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.மயிலாடுதுறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமானோர் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றனர்.



▶ நாகப்பட்டினம் அமர நந்தீஸ்வரர் ஆலயத்தில் பால்பண்ணைச்சேரி ரெயின்போ டிஜிட்டல் ஸ்டுடியோ சார்பாக அதன் உரிமையாளர் தாமு, கோயில் பிரகாரத்தில் 3 தென்னம்பிள்ளைகளை நட்டு வைத்து வேண்டுதல் நிறைவேற்றினார்.



▶ வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைப்பெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் குமாரவேல் பாண்டியன், மாற்றுத் திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் சரவணன் உள்ளனர்.

# நடுவழியில் ஆம்புலன்சில் பிறந்த அழகிய குழந்தை



திருப்பத்தூர் டிச.12.
திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த நாயகனேரி மலை கிராமம் சோலை கொள்ளை மேடு என்ற இடத்தை சார்ந்த மகேந்திரன் என்பவரின் மனைவி நிஷா (23) இவருக்கு இரண்டாவது பிரசவத்திற்காக, பிரசவ வலி ஏற்பட்டு 108 ஆம்புலசை அழைத்துள்ளனர்.

இரவு நேரத்தில் 108 ஆம்புலன்ஸில் அப்பெண்ணை ஏற்றிக் கொண்டு மருத்துவமனையில் சேர்க்க நடுக்காட்டில் வந்து கொண்டிருக்கும் பொழுது பிரசவவலி அதிகரித்தது. இதை தொடர்ந்து ஆம்புலன்சிலேயே அப்பெண்ணுக்கு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது. இதையடுத்து அவசர கால மருத்துவ நிபுணர் சார்லஸ், மற்றும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் கங்கா பாலாஜி ஆகியோர் மின்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தாயையும் , சேயையும் கொண்டு சென்று சேர்த்தனர். தற்போது இருவரும் நலமாக உள்ளனர்.

# மிக்ஜாம் புயலில் பாதிக்கப்பட்ட குடும்பத்தை கண்டுகொள்ளாத ஊராட்சி நிர்வாகம்



செய்யூர்:டிச-12
செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட நெல்வாய் பாளையம் ஊராட்சியில் ஆர். கலைவாணன் என்பவர் வசித்து வந்தார். அவர் வீடானது கடந்த மிக்ஜாம் புயலின் தாக்கம் அதிகமாக ஏற்பட்டு கனமழையில் அவரது வீட்டை சுற்றிலும் மழை நீர் சூழ்ந்து வெள்ளக்காடானது இதில் வீடு முற்றிலும் இடிந்து தரை மட்டமானது.

இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊராட்சி நிர்வாகத்திடம் தெரிவித்த போது இது நாள் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் இதனால் அந்த குடும்பமானது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தங்குவதற்கு வீடு இல்லாமல் தவிக்கின்றனர்.

எனவே இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கள ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்க கோரியும், மேலும் இதுவரை கண்டுகொள்ளாத கிராம நிர்வாக அலுவலர் மீதும் ஊராட்சி நிர்வாகத்தின் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டி கிராம பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# அருள்மிகு ஸ்ரீ பூரி மரத்தவ முனீஸ்வரர் ஆலய குடமுழுக்கு விழா





சென்னை, டிச. 12-
சென்னை, காட்டுப்பாக்கம், பூந்தமல்லிட்ரங்ரோடுபகுதியில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பூரி மரத்தவ முனீஸ்வரர் ஆலய குடமுழுக்கு விழா வெகு சீறோடும் சிறப்போடும் நடைபெற்றது.

நான்காம் கால மகா தீபாராதனையை தொடர்ந்து யாத்ராதானம், குடம் புறப்பாடு, மூலவர் விமானம் ராஜகோபுரம் மகா கும்பாபிஷேகமும் அதனை அடுத்து, மூலவர் விமானத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ பூரி மர தவமுனீஸ்வரர் மகா கும்பாபிஷேகமும் வெகு விமர்சையாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மகா தீபாராதனை, தீர்த்தம் மற்றும் அருள் பிரசாதம் வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

கும்பாபிஷேக விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகத் தலைவர் எம். எஸ்.ஆரிமுத்து, நிர்வாகச் செயலாளர் கே.என். பொண்ணுரங்கன், நிர்வாகப் பொருளாளர் கே.ஆறுமுகம் மற்றும் விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.



▶ வேளாண் அறிவியல் நிலையம் மாதூர், காரைக்கால்: இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் ஹைதராபாத்திலுள்ள மண்டல வேளாண் தொழில்நுட்ப மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுறுத்தலின்படி காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் வெ. ஜெயபால் , கிரிஷிஜாக்ரன் பத்திரிகையின் வாயிலாக வழங்கப்படும் இந்தியாவின் மில்லினியர் விவசாயி விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து வெ. ஜெயபால் மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் இந்தியாவின் மில்லியனர் விவசாயி விருது பெற்று உள்ளார்.

சட்ட உரிமைகள் கழகம்-இன்டர்நேஷனல் சார்பாக

# மனித உரிமைகள் தின விழா மற்றும் 11ம் ஆண்டு துவக்க விழாவான முப்பெரும் விழா



மேல்மருவத்தூர், டிச.12-
செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூரில் நேற்று முன்தினம் சட்ட உரிமைகள் கழகம்-இன்டர்நேஷனல் சார்பாக உலக மனித உரிமைகள் தின விழா 11-ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் மாணவர்கள், மகளிர், தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல் மற்றும் முப்பெரும் விழா கோலாகலமாக நடைபெற்றது.

இதில் சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் சார்பாக நடைபெற்ற முப்பெரும் விழாவுக்கு சர்வதேச சட்ட உரிமைகள் கழக செயலாளர் டாக்டர்.அ.சுரேஷ்குமார் தலைமை தாங்கினார்.உடன் கழகத்தின் மக்கள் செய்தி தொடர்பாளர் டாக்டர். டி.ஜி.மனோகர்.சர்வதேச செயலாளர் வழக்கறிஞர் வி.எஸ்.முகமது முபாரக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தமிழ் மாநிலத் தலைவர் ஐ.அகமது ரியாஸ் வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக முன்னாள் காவல்துறை உதவி ஆணையர் எம்.கருணாநிதி கலந்துகொண்டு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் மாநில தலைவர் எஸ். ஆனந்த்குமார், புதுச்சேரி பத்திரிகையாளர் சங்க நிர்வாகிகள் க.ரவிஜான், கலைச்சுடர் கா.பாரதி, ஜெயபால், தமிழ் மாநில தலைவர் டாக்டர்.ஆ.பி. கமல்ராஜ், சமூக விழிப்புணர்வு இயக்க தலைவர் டாக்டர்.வி.ஆர். ராஜ்குமார், இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி ஆலோசகர் டாக்டர்.எம். எஸ்.நவாஸ், செங்கல்பட்டு மாவட்ட துணைத்தலைவர் லோகேஷ் கண்ணன், கழகத்தின் செயல் வீரர் அச்சரப்பாக்கம் ஒன்றிய செயலாளர் ஏ.பி.முருகேசன் மற்றும் கழகத்தின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கிளை கழக நிர்வாகிகள், ஆசிரியர் பெருமக்கள் என 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு முப்பெரும் விழாவினை சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்ச்சியின் இறுதியில் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் ஜே.எஸ்.அம்பேத்தனிகா முப்பெரும் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி கூட்டம் நிறைவு பெற்றது.



▶ மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பாக மகாகவி பாரதியார் 141 வது பிறந்தநாள் அனுசரிக்கப்பட்டது. இதில் பாரதியாரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாவட்ட குழு உறுப்பினர் ரஞ்சித் தலைமை வகித்தார். ஆசிரியர் தங்கவேல், பேராசிரியர் சதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாவட்ட செயலாளர் சுரேஷ், வட்டத் தலைவர் வீரசேனன், மாவட்டத் தலைவர் தங்க. சேகர் ஆகியோர் பாரதியாரின் புகழ் குறித்து சிறப்புரையாற்றினர்.

# பாரதியார் பிறந்த நாள் கவியரங்கம்



தர்மபுரி, டிச. 12-
தருமபுரி மாவட்டத் தமிழ்க்கவிஞர் மன்றம் சார்பில் மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா கவியரங்கம் நடத்தப்பட்டது.

கவியரங்கத்திற்கு மன்றத் தலைவர் பாவலர் கோ. மலர்வண்ணன் தலைமை தாங்கினார். கா.முனியப்பன் முன்னிலை வகித்தார். இரா. மதனகோபாலன் வரவேற்புரை ஆற்றினார். கூத்தப்பாடி மா. பழனி ஆசிரியர் வாழ்த்துரை வழங்கினார். நெஞ்சு பொறுக்குதில்லையே என்னும் தலைப்பில் கவிஞர்கள் கா. இராசகுமாரன், இரா. மதனகோபாலன், சு. இரவிச்சந்திரன், வத்தலாபுரம் முருகேசன், தகடூர் சு.தமிழரசன், பெ. கோபாலகிருஷ்ணன், இரா. சம்பத், கே.வி. குமார், நா.நாகராஜ், கவிதாயினிகள் அரங்கநாயகி கண்ணன், மா.சித்ரா, வெ.குறள்மொழி ஆகியோர் கவிதை வாசித்தனர். இறுதியில் ந.முகுந்தமாதவன் நன்றி நவின்றார். இரா. கங்காதேவி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். குறள்மொழி முனியப்பன் இல்லத்தார் வந்திருந்த அனைவருக்கும் விருந்து படைத்தனர்.

# மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் பெற்றுத்தந்த ஆட்சியருக்கு நன்றி தெரிவித்த விவசாயிகள்



மயிலாடுதுறை, டிச. 12-
மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த 2023-ஜனவரி 30-ம் தேதி முதல் 03.02.2023 வரையிலான காலத்தில் நெல் அறுவடை பருவத்திலும், உளுந்து விதைத்து வளர்ச்சி பருவத்திலும் இருந்த நிலையில் பருவம் தவறி பெய்த மழையினால் அறுவடை பருவத்தில் இருந்த நெல் பயிர்களும், வளர்ச்சி பருவத்தில் இருந்த உளுந்து பயிர்களும் பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு மிகப்பெரிய மகசூல் இழப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில், மாவட்ட ஆட்சியரின் சீரிய முயற்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களை வேளாண்மைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் கணக்கெடுத்து 5 வட்டார விவசாயிகளுக்கும் நெல்லுக்கு 1 ஹெக்டருக்கு ரூ.20 ஆயிரம் வீதமும், உளுந்துக்கு 1 ஹெக்டருக்கு ரூ.3 ஆயிரம் வீதமும், விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்க தமிழக அரசால் ஆணையிடப்பட்டது. அதன்படி, மாநில பேரிடர் நிதியிலிருந்து முதல் தவணையாக 15,914 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை ரூ.6 கோடியே 64 இலட்சமும், இரண்டாம் தவணையாக 19,655 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை ரூ.5 கோடியே 86 இலட்சமும் வழங்கப்பட்டது.

இந்நிவாரணத் தொகையை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர், பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் விடுபடாமல் நிவாரணத்தொகையை பெற்று தந்த மாவட்ட ஆட்சியருக்கும் காவிரி டெல்டா பாசனதாரர் சங்கத்தின் சார்பாக கோபி கணேசன் தலைமையில் திரளான விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் ஏபி மகாபாரதியை நேரில் சந்தித்து, பொன்னாடை போர்த்தி, நினைவு பரிசு வழங்கி விவசாய சங்கத்தின் சார்பில் தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது, மாவட்ட ஆட்சியர் பேசுகையில், இந்நிவாரணத் தொகையை பெற்று தந்த பணியானது, ஒரு கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றியாக கருதப்படுகிறது. எனவே, இப்பணியை திறம்பட செய்த வேளாண்மைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன். மேலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 5 வட்டார விவசாயிகளுக்கும் 2 தவணையாக நிவாரணத்தொகையை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கும், வேளாண்மைத்துறை அமைச்சர்களுக்கும் விவசாயிகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார், காவிரி டெல்டா பாசனதாரர் சங்கத்தின் சார்பில் மிக்ஜாம் புயல் நிவாரண நிதியாக ரூ.10 ஆயிரத்திற்கான ரொக்கத்தினை மாவட்ட ஆட்சியர்களிடம் கோபி. கணேசன் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.மணிமேகலை, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத்திட்டம்ஜகண்மணி, மாவட்ட வழங்கல் அலுவலர் பானுகோபன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஜெயபாலன் மற்றும் அரசு அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



▶ இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரி புதுச்சேரியின் அறிவுறுத்தலின் பேரில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் / குறிப்பட்ட எண்ணிக்கை மட்டும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்காக காரைக்கால் மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களின் முன்னிலையில் எடுக்கப்பட்டு அதற்காக ஒதுக்கப்பட்ட தனி அறையில் மேலே குறிப்பிட்ட தேவைக்காக வைக்கப்பட்டது. மேலும், மின்னணு வாக்கு பதிவு இயந்திரத்தின் செயல்விளக்க மையம் 1. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 2. காரைக்கால் வட்டாட்சியர் அலுவலகம் 3. திருநள்ளார் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய மூன்று இடங்களில் செயல்பட துவங்கும் என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இந்த வாய்ப்பை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள படுகிறார்கள். மேலும் இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர்கள் ஜான்சன் மற்றும் செந்தில்நாதன், வட்டாட்சியர்கள் செல்லமுத்து, பொய்யாதமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

# புதுக்கோட்டை; ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி திட்டத்தை துவங்கி வைத்தார் கல்வித்துறை அமைச்சர்



புதுக்கோட்டை , டிச.12–

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி திட்ட துவக்க விழா புதுக்கோட்டை எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது. பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி "ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி" திட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அவர் பேசுகையில் "எல்லோருக்கும் எல்லாம்" போய் சேர வேண்டும் என்கிற நோக்கில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் இந்த திட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் புத்தகங்களை வெறுமனே மனப்பாடம் செய்வதற்கு பதிலாக ஒவ்வொரு அறிவியல் கூற்றுகளும் எவ்வாறு தமது வாழ்வில் தொடர்புடையது என்பதை புரிந்து படிப்பதற்கு இதுபோன்ற திட்டங்கள் பலனளிக்கும். சீனாவில் ஒவ்வொரு ஆண்டும் கிட்டதட்ட 43000 அறிவியல் கண்டுபிடிப்புகள் நடக்கின்றன. அதுபோல நம் நாட்டில் கண்டுபிடிப்புகள் நிகழ வேண்டும்.

அடுத்தகட்டமாக மாணவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறுவதற்கான முயற்சிகளை ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொள்ள வேண்டும். முதல்வரின் விருப்பத்திற்கு இணங்க அடிமட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்து பள்ளி குழந்தைகளுக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகள் போய்சேர வேண்டும். அறிவியல் அறிவு நமது முதல்வரின் விருப்பமாகும். முதல்வரின் விருப்பம் போல் எல்லோருக்கும் எல்லாம் போய் சேர எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் பணியாற்ற வேண்டும். இந்த திட்டம் சென்னை மாணவர்களுக்கு மட்டும் பயனளிக்கும் வகையில் நின்று விடக்கூடாது என்று சென்னையில் நடந்த துவக்க விழாவில் கூறினார்.

சென்னைக்கு அடுத்தபடியாக பூம்புகாரில் தற்போது புதுக்கோட்டையிலும் இத்திட்டம் செயல்படுவது மகிழ்ச்சியளிக்கின்றது. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத்தில் உள்ள மாணவர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தை விரிவு படுத்த முயற்ச்சிக்க வேண்டும். பேராசிரியர் எம். எஸ். சாமிநாதன் அவர்கள் என்னென்ன கனவு கண்டாரோ, என்னென்ன பரிந்துரைத்தாரோ அவற்றை எல்லாம் நிறைவேற்ற வேண்டும். அவற்றை நினைவாக்க என்றும் இன்றைய தமிழ்நாட்டின் முதல்வர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கண்டிப்பாக தமிழ்நாடு அரசு எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தை அறிவு பங்காளர்களாக கொண்டு பல்வேறு திட்டங்களில் அறிவு சார் பொருள் பொதுமக்களுக்கு சென்றடைய இணைத்து செயல்பட தயாராக இருக்கிறோம்.

இத்திட்டத்தை துவங்கி வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் கண்டிப்பாக இந்த திட்டம் மாணவர்களிடத்தில் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை என்றார். நிகழ்வில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன தலைவர். டாக்டர். சௌமியா சாமிநாதன் அவர்கள் முக்கிய உரை நிகழ்த்தினார்.

அவர் இந்த திட்டம் பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் கனவு. அவருக்கு பொதுவாக குழந்தைகள் மீது அதீத அன்பு உண்டு. அனைத்து குழந்தைகளுக்கும் மிகுந்த திறமையாற்றல் உள்ளது, ஆனால் அவர்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அத்தகைய வாய்ப்பை வழங்கும் ஒரு திட்டமாக இந்த திட்டம் இருக்க வேண்டும் என்று கூறினார். எம்.எஸ்.சுவாமிநாதனின் அவரின் அந்த கனவை மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் நோக்கில் நவீன தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளை பயன்படுத்தி அதிகப்படியான மாணவ மாணவர்களின் பயன்பெற அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்போடு செயல்படுத்த விரும்புகிறோம். நவீன கணினியை பயன்படுத்தி வழங்கப்படும் பயிற்சிகளில் ஏராளமான விவசாயிகள் மீனவர்கள் பழங்குடியினர் மற்றும் மாணவ மாணவியர் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொள்கிறார்கள் என்றார்.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா பேசும்போது, இந்த திட்டத்தின் பெயரை மிகவும் அருமையாக மாணவர்களை கவரும் வகையில் உள்ளது. அனைத்து தரப்பு மாணவர்களையும் ஊக்கப்படுத்தி அவர்களின் அறிவியல் அறிவும் மேம்பட செய்கிறது என்றார். நிகழ்ச்சில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன உயிரி தொழில் நுட்பத்துறை இயக்குநர் வி.ஆர்.பிரபாவதி "ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி" திட்டத்தைப்பற்றி விளக்கிப்பேசினார்.

நிகழ்ச்சியில் 5 ஸ்டார் நிதி குழுமம் தலைமை நிதி அலுவலர் ஸ்ரீகாந்த் கோபாலகிருஷ்ணன், அவர் தனது உரையில் எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். எங்களால் முடிந்த சிறு உதவியை இத்திட்டத்திற்கு வழங்கியதில் பெருமைகொள்கிறோம். தொடர்ந்து ஒத்துழைப்பை நல்குவோம் என்றார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா, மூத்த வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், முதன்மை கல்வி அலுவலர் எம். மஞ்சுளா, தேசிய நல்லாசிரியர் விருதாளர் கவிஞர். தங்கம் மூர்த்தி, ஆசிரியர் மனசுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதீஷ்குமார், வேளாண்மை இணை இயக்குனர் எம். பெரியசாமி, தேசிய இணைய கல்விக் கழக பிரதிநிதி ஜி.எஸ் தனபதி, தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் எம்.வீரமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன செயல் இயக்குனர் அனைவரையும் வரவேற்றார். ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் நன்றி கூறினார்.

# என்.சங்கரய்யாவின் நினைவாக மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கல்



புதுக்கோட்டை, டிச.12–

சுதந்திரப் போராட்ட வீரர், தகைசார் தமிழர் என். சங்கரய்யாவின் நினைவைப் போற்றும் வகையில் புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியில் இந்திய மாணவர் சங்கத்தின் சார்பில் 103 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

இந்திய மாணவர் சங்க புதுக்கோட்டை நகரச் செயலாளர் மகாலெட்சுமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கல்லூரியின் முதல்வர் புவனேஸ்வரி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு மாணர்களுக்கு மரக்கன்றுககளை வழங்கியும், கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளை நடவு செய்தும் சிறப்பித்தனர்.

# வெள்ளத்தினால் ஏற்படும் நோய்களும் அதை தடுக்கும் வழிமுறைகள் குறித்தும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் கூறும் அறிவுரை



புதுக்கோட்டை, டிச.12–

சென்னையில் தற்போது மிகக்கனமழை பெய்ததன் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், இதுபோன்று வெள்ளத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து பொதுமக்கள் தங்களை காத்துக்கொள்ளவும் அதனால் ஏற்படும் நோய்கள் அதை தடுக்கும் வழிமுறைகள் குறித்து மருத்துவர் கூறும் அறிவுரை.

மிக அதிக கனமழை காரணமாக குடியிருப்புகளை சுற்றிமழைநீர் போகாமல்தேங்கி நிற்கிறது, மழைநீர் போகும் பாதையில் பிளாஸ்டிக் மற்றும் தேவையில்லாத பொருட்கள் அடைத்துக்கொள்வதாலும் மழைநீர் போக பாதை இல்லாத நிலை ஏற்படுகிறது, மழைநீர் தேங்குவதால் ஏற்படும் பாதிப்புகள் வயிற்றுப்போக்கு சம்பந்தப்பட்ட நோய்கள் , டைபாய்டுகாலரா அமீபியாஸிஸ் மஞ்சள்காமாலை போன்றவை கொசுக்கள் மூலம் பரவும் நோய்கள் மலேரியா, டெங்கு காய்ச்சல், சிக்கன்குனியா, சுவாச கோளாறுகள் மற்றும் தொற்றுகள் ஆஸ்துமா சளி இருமல் நிமோனியா காய்ச்சல், தோல் பாதிப்புகள்

தோல் சுத்தம் இல்லாத போது தோல்வியாதி மற்றும் அரிப்பு ஸ்கேபிஸ் நுண் கிருமிதொற்று ஏற்படுகின்றது, விஷ பூச்சிக்கடிகள் பாம்பு பூரான் தேள் கடியினால் வரக்கூடிய நோய்கள் எந்த பாதிப்பாக இருந்தாலும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகளை அணுகவும்

நம் வீட்டை சுற்றி தூய்மையாக வைத்திருப்பது நம் ஒவ்வொருவரின் கடமை, தேவையற்ற டயர் வேண்டாத பொருட்களை வைக்கக்கூடாது மழைநீர் வெளியேறும் பாதையில் பிளாஸ்டிக் குப்பைகள் உள்ளிட்ட தேவையற்ற பொருட்களினால் அடைப்பு ஏற்படுத்தக்கூடாது. சிறு சிறு இடங்களில் நீர் தேங்கி இருந்தால் அந்த நீரை வெளியேற்றி தண்ணீர் தேங்காதவாறு இடத்தை சமன் செய்ய வேண்டும், இவ்வாறு செய்வதால் கொசுக்கள் உற்பத்தியாகாமல் பார்த்துக் கொள்ளலாம் வயிற்றுப் போக்கை தடுக்க சுத்தமான குடிநீரை காய்ச்சி பருக வேண்டும் நீண்ட நேரம் வைத்து ஆறிப்போன உணவை உண்ணக்கூடாது

சுவாசத்தொற்றை தடுக்க முகக்கவசம் சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டும் வெளியே சென்று வந்தால் கை கால்களை சோப்பு போட்டு கழுவ வேண்டும். தோல் வியாதி தடுக்க தினமும் சோப்பு போட்டு குளிக்க வேண்டும் துவைத்த ஆடைகளையே அணிய வேண்டும்.

கொசுக்களால் வரும் நோயை தடுக்க. குட்டைகளில் தண்ணீர் தேங்காமல் சரிசெய்ய வேண்டும் கொசு வலைகளை பயன்படுத்தலாம், சுகாதார அதிகாரிகளின் மூலம் கொசு ஒழிப்பு புகை அடிக்கலாம் இது போன்ற வழிமுறைகளை பின்பற்றி பொதுமக்கள் வெள்ளம் இதனால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து தங்களை காத்துக்கொள்ள வேண்டுமென புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி சமூக மருத்துவம் மற்றும் நோய் தடுப்புதுறை மருத்துவர் கே.சரவணன் தெரிவித்துள்ளார்.

# ஆலங்குடி அருகே அரசுபள்ளியில் தொழுநோய் மற்றும் டெங்கு விழிப்புணர்வு முகாம்



ஆலங்குடி, டிச.12–

ஆலங்குடி அருகே கீழாத்தூர் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தொழுநோய் மற்றும் டெங்கு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கீழாத்தூர் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தொழுநோய் மற்றும் டெங்கு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது, பள்ளியின் தலைமையாசிரியர் செல்வம் வரவேற்றார், முகாமில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட திருவரங்குளம் வட்டார மருத்துமில்லா மேற்பார்வையாளர் ரமா. ராமநாதன் மாணவர்வர்கள் மத்தியில் தொழுநோய் என்றால் என்ன? தொழுநோய் எப்படி ஏற்படுகிறது? தொழுநோயின் அறிகுறிகள் என்ன? தொழுநோயிலிருந்து நாம் நம்மை எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டும்? என்பன குறித்து மாணவர்களிடத்தில் முழு விளக்கத்துடன் கூடிய விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இம்முகாமில் கலந்து கொண்ட வடகாடு சுகாதார ஆய்வாளர்கள் திருச்செல்வம் மற்றும் டார்வின் ஆகியோர் மழைக்கால நோய்களான டெங்கு, மலேரியா, டைப்ஃபாய்டு, சிக்கன் குனியா போன்ற நோய்கள் எவ்வாறு ஏற்படுகிறது? இந்த நோய்களிலிருந்து நம்மை எவ்வாறு நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்? நமது சுற்றுப்புறத்தில் எந்த இடத்திலும், எந்தப் பொருள்களிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மாணவர் மத்தியில் எடுத்துரைத்தும், மாணவர்களிடத்தில் கேள்வி-பதில் மூலமும் டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர், மாணவர்கள் சுகாதார விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர், பள்ளியின் இடைநிலை ஆசிரியர் சசிகுமார் நன்றி தெரிவித்தார்.



▶ மதுரை மிட்லாண்ட் தியேட்டரில் நடிகர் ரஜினிகாந்தின் முத்து திரைப்படம் புத்தம் புது பொலிவுடன் தியேட்டரில் வெளியிடப்பட்டது. இதில் மதுரை மாவட்ட பொறுப்பாளர் பாலதம்பு ராஜ் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகம், பேனா மற்றும் திரைப்படம் காண வந்த பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. தாரதப்பட்டை ஆரவாரத்துடன் ரசிகர்கள் தியேட்டருக்கு சென்றனர். இதில் கே.வி. ஆர். தியேட்டரின் உரிமையாளர் கஜேந்திரன், மன்ற பொறுப்பாளர் பாலதம்புராஜ், சம்பட்டிபுரம் முத்துமணி, பப்பிசிட்டி கணேசன், பாபு மற்றும் பலர் கேக் வெட்டி கொண்டாடி சிறப்பித்தனர்.

# திருமயத்தில் அப்போஸ்தலிக் இந்தியன் மிஷன் சார்பில் சமத்துவ கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நிகழ்ச்சி



திருமயம்,டிச.12–

திருமயத்தில் அப்போஸ்தலிக் இந்தியன் மிஷன் சார்பில் சமத்துவ கிறிஸ்துமஸ்மற்றும்புத்தாண்டு நிகழ்ச்சி நடைபெற்றது, அனைத்து மதத்தை சார்ந்த பொதுமக்களும், வெளிமாநிலத்தை சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

புதுக்கோட்டை திருமயத்தில் அப்போஸ்தலிக் இந்தியன் மிஷன் என்ற தனியார் அறக்கட்டளை சார்பில் 16–வது சமத்துவ கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நிகழ்ச்சி விமர்சையாக நடைபெற்றது, இந்த நிகழ்ச்சியில் நடனம், இசை உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, மேலும் திருமயத்தின் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து இந்து, முஸ்லீம் மக்களை சாண்டா வேடமிட்டவர்கள் வரவேற்பு அளித்தது ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதாக அமைந்தது, விழாவில் கலந்து கொண்டவர்கள் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர், ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மேலும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை வரவேற்கும் விதமாக கேக் வெட்டி கொண்டாடப்பட்டது, இந்த சமத்துவ கிறிஸ்துமஸ் விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதோடு கலந்து கொண்டவர்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டது, நிகழ்ச்சி ஏற்பாடுகளை அப்போஸ்தலிக் இந்தியன் மிஷன் அறக்கட்டளை நிர்வாகி செய்திருந்தனர்.

# கீரமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் உண்டியல் திருட்டு



ஆலங்குடி, டிச.12–

கீரமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் உண்டியலை நேற்று முன்தினம் இரவு மர்மநபர்கள் திருடிச்சென்றனர், அதன் சிசிடிவி கேமரா பதிவுகளை வைத்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கீரமங்கலத்தில் பிரசித்தி பெற்ற முத்துமாரியம்மன் கோயிலில் உள்ள உண்டியலை மர்மநபர்கள் இருவர் நேற்று முன்தினம் இரவு திருடிச்சென்றனர். இதுகுறித்து தகவலறிந்த கீரமங்கலம் போலீஸார் கோயிலில் வைக்கப்பட்டு இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். அதில், கோயில் சுற்றுச்சுவரை ஏறிக் குதித்து உள்ளே சென்ற 2 இளைஞர்கள் முகத்தை மூடியவாறு சென்று கோயில் உண்டியலை திருடிச்சென்றது தெரியவந்ததுள்ளது.

திருட்டில் ஈடுபட்ட ஒரு இளைஞர் முகத்தை மறைத்திருந்த துணியை விலக்கி சிசிடிவி கேமராவை பார்த்து நகைப்பு காட்டிச்சென்றது போலீஸாரை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது, இதுகுறித்து கீரமங்கலம் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.


# சங்கரன்கோவில் அருகே பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பகுதி நேர நியாய விலை கடை : எம்எல்ஏ ராஜா திறந்து வைத்தார்



சங்கரன்கோவில். டிச.12–

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட புதுக்குளம் கிராம மக்கள் 4 கிலோ மீட்டர் தூரம் சென்று அருகில் உள்ள மகேந்திர வாடி என்ற கிராமத்திற்கு சென்று நியாய விலை கடை பொருட்களை பெற்று வந்தனர், தங்களுக்கு பகுதிநேர நியாய விலை கடை வேண்டும் என கோரிக்கை வைத்தனர். பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்த வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ புதுக்குளத்தில் உடனடியாக நியாய விலை கடை வருவதற்கு ஏற்பாடு செய்தார்.

புதுக்குளம் கிராம மக்களின் கோரிக்கையான பகுதிநேர நியாயவிலை கடையைதிறக்கும்நிகழ்ச்சி மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை தலைமையில் நடைபெற்றது, தென்காசி வடக்கு மாவட்ட கழக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு புதிய நியாய விலை கடையை துவக்கி வைத்தார். பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய ராஜா எம்எல்ஏவுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துக்கொண்டனர், இதில் ஊராட்சி மன்றத் தலைவர் செல்வி, திமுக கிளை கழக செயலாளர் பொன்ராஜ், ஆதிதிராவிட நல உரிமை பிரிவுத் தலைவர் ராஜ் என்ற கருப்பசாமி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவுத் தலைவர் மரியலூயிஸ் பாண்டியன், கிளைக் கழகச் செயலாளர்கள் பாபு, ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




▶ மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் ஒவ்வொரு மாதமும் விபத்துகளில் காயமடைந்த 200 நபர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது, அவசரநிலை சிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள், அறுவை சிகிச்சை மருத்துவர்கள், எலும்பியல் சிகிச்சை நிபுணர்கள் மற்றும் பிற நிபுணர்களை உள்ளடக்கிய ஒரு பல்துறை விபத்து சிகிச்சை குழு சிகிச்சையளிக்கிறது என்றும் சாலை விபத்தில் காயமடைந்தவர்களின் கோல்டன் ஹவர் என்னும் ஒரு மணி நேரத்தில் சிகிச்சை அளிப்பதன் முத்தியத்துவத்தையும், விழிப்புணர்வு பற்றியும் மருத்துவர்கள் செய்தியாளர் சந்திப்பில் எடுத்துரைத்தனர், இந்நிகழ்வில் மருத்துவர்கள் நரேந்திர நாத் ஜனா, செல்வ முத்து குமரன், சத்தியநாராயணா, மோகன், கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பொதுமக்கள் மீது தாக்குதல் : திமுக எம்எல்ஏ மீது வழக்குப் பதிந்து கைது செய்ய ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை : டிச. 12–

"மழைக்காலத்தில் குறைகேட்க வராதது ஏன்? எனக் கேட்டதற்காக அப்பாவி மக்கள்மீது தாக்குதல் நடத்துவதா? திமுக சட்டப்பேரவை உறுப்பினர் மீது வழக்குப் பதிந்து கைது செய்ய வேண்டும்" என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்குட்பட்ட கொருக்குப்பேட்டையில், மழை வெள்ளத்தால் தாங்கள் பாதிக்கப்பட்டிருந்த போது, குறைகளை கேட்க வராதது ஏன்? என்று வினா எழுப்பிய பொதுமக்களை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி திமுக சட்டப்பேரவை உறுப்பினர் எபினேசரும், அவரது ஆதரவாளர்களும் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர். ஒருவர் மண்டை உடைந்து ரத்தக்காயங்களுடன் ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சட்டப்பேரவை உறுப்பினர் மற்றும் அவரது ஆதரவாளர்களின் அத்துமீறலும், தாக்குதலும் கடுமையாக கண்டிக்கத்தக்கவை.

மிக்ஜாம் புயல் மழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் வட சென்னை மக்கள்தான். கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக சகித்துக்கொள்ள முடியாத சூழலில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மழை நீரும், கழிவு நீரும் சூழ்ந்த நிலையில் அவர்கள் தவித்துக் கொண்டிருந்த போது, 'உடுக்கை இழந்தவன் கை போல' சட்டப்பேரவை உறுப்பினரும், பிற மக்கள் பிரதிநிதிகளும் அங்கு சென்று மக்களின் இடுக்கண் கலைந்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் எவரும் மக்களை எட்டிக்கூட பார்க்கவில்லை. அதற்கு மாறாக, நிவாரண உதவி டோக்கன்களை வழங்குவதற்காக சட்டப்பேரவை உறுப்பினர் வந்த போது, "துயரத்தின் போது வராத நீங்கள், இப்போது வருவது ஏன்?" என்று மக்கள் வினா எழுப்பியிருக்கின்றனர். அவர்களின் எதிர்ப்பும், கோபமும் நியாயமானதுதான்.

பாதிக்கப்பட்ட மக்களின் கோபத்தை புரிந்து கொண்டு அவர்களை அமைதிப்படுத்த சட்டப்பேரவை உறுப்பினர் முயன்றிருக்க வேண்டும். மாறாக, தமக்கு வாக்களித்து சட்டப்பேரவை உறுப்பினராக்கிய மக்கள் மீதே தாக்குதல் நடத்தியிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுமக்களைத் தாக்கிய சட்டப்பேரவை உறுப்பினர் எபினேசரையும், அவரது ஆதரவாளர்களையும் கைது செய்ய வேண்டும். தாக்குதலில் காயமடைந்த மக்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் உதவித்தொகை வழங்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# தென்ஆப்பிரிக்காவுடன் டெஸ்ட் தொடர் கோஹ்லி ரன் குவித்தால் இந்தியாவுக்கு வெற்றிவாய்ப்பு

## ஜாக் காலிஸ் கருத்து



**டர்பன் : டிச. 12,**

**தென்னாப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி டி20 தொடர், ஒருநாள் தொடர் முடிவடைந்த பின், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது.**

முதல் டெஸ்ட் போட்டி டிசம்பர் 26-ம் தேதி தொடங்குகிறது. இந்திய அணி இதுவரை தென்ஆப்பிரிக்க மண்ணில் ஒரு டெஸ்ட் தொடரை கூட வென்றதில்லை. தற்போது இந்திய அணியில் திறமையான வீரர்கள் இருப்பதால் முதல் டெஸ்ட் தொடர் வெற்றியை பெற்று இந்திய அணி வரலாற்றை உருவாக்க இது ஒரு சிறந்த வாய்ப்பாக பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், தென் ஆப்பிரிக்க அணியின் முன்னாள் ஆல்ரவுண்டர் ஜாக்ஸ்காலிஸ்கூறியதாவது:-

விராட் கோஹ்லி ஒரு பெரிய வீரர், அவர் எங்கிருந்தாலும் சரி. தென் ஆப்பிரிக்காவில் விளையாடி ஓரளவு வெற்றியும் பெற்று இருக்கிறார். அவர் அந்த அனுபவத்தை சக வீரர்களுக்கு, குறிப்பாக இளம் வீரர்களுக்கு சொல்லிக் கொடுப்பார், தென்ஆப்பிரிக்க சூழ்நிலைகளை எவ்வாறு நிர்வகிப்பது, இங்கே போட்டியின் போது என்ன எதிர்பார்க்கலாம் என்பது பற்றிய யோசனைகளை அவர்களுக்கு அவரால் சொல்லிக் கொடுக்க முடியும். மேலும் கோஹ்லி தென்ஆப்பிரிக்காவில் ஒரு பெரிய டெஸ்ட் தொடரை ஆட வேண்டும் என விரும்புவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தற்போது நல்ல ஃபார்மில் இருக்கிறார். எனவே இந்திய அணியின் வெற்றிக்கு உதவுவதில் அவர் முக்கிய பங்கு வகிப்பார் என நினைக்கிறேன். அவர்கள் இங்கு வெற்றிபெற வேண்டுமானால், விராட் கோஹ்லி ரன் குவித்து ஒரு நல்ல டெஸ்ட் தொடரைப் பெற்றிருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

தென் ஆப்பிரிக்க மண்ணில் இதற்கு முன் டெஸ்ட் தொடரில் அதிக ரன் குவித்த வீரர் விராட் கோஹ்லி தான். விராட் கோஹ்லி தென்ஆப்பிரிக்காவில் 14 இன்னிங்ஸ்களில் களமிறங்கி 719 ரன்கள் (பேட்டிங் சராசரி 51.36) எடுத்து இருக்கிறார். இதில் 2 சதங்கள் மற்றும் 3 அரைசதங்களையும் அடித்துள்ளார். இதன் காரணமாக கோஹ்லி இந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாக ஆடுவார், இந்திய அணிக்கு முதல் டெஸ்ட் தொடர் வெற்றியை தென்ஆப்பிரிக்க மண்ணில் பெற்றுக் கொடுப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப்

# தங்கம் வென்றது தமிழக ஆடவர் அணி மகளிர் அணிக்கு வெண்கலம்





**லூதியானா : டிச. 12,**

**73-வது தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் தொடர் பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் உள்ள குருநானக் தேவ் உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இதில் ஆடவர் பிரிவில் தமிழக அணி தங்கம் வென்றது. மகளிர் பிரிவில் தமிழக அணி வெண்கலம் வென்றது.**

இறுதிப் போட்டியில் ரயில்வே ஆடவர் அணியை 72-67 என்ற கணக்கில் வீழ்த்தியது தமிழக அணி. மகளிர் பிரிவில் ரயில்வே அணி கேரளாவை வீழ்த்தி தங்கம் வென்றது. தங்கம் வென்ற அணிக்கு ரூ.5,00,000 பரிசு வழங்கப்பட்டது. மகளிர் பிரிவில் மூன்றாவது இடத்தை தமிழக அணி பிடித்து, வெண்கலம் வென்றது.

கர்நாடக அணிக்கு எதிராக தமிழக மகளிர் அணி வெற்றி பெற்றது. 65-54 என்ற கணக்கில் தமிழக மகளிர் அணி வெண்கலம் வென்றது. தமிழக வீரர் பாலதனேஸ்வரர் மற்றும் ரயில்வே மகளிர் அணி வீராங்கனை பூனம் ஆகியோர் மோஸ்ட் வேல்யூயபிள் பிளேயர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். அதனால் அவர்கள் இருவருக்கும் கார் பரிசாக வழங்கப்பட்டது.

# 2 ஆண்டுகளுக்குப் பின்னர் மே.இந்தியத் தீவுகள் அணியில் ஆந்த்ரே ரஸல்




**ஆன்டிகுவா : டிச. 12,**

**2 ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கு இந்தியத் தீவுகள் அணியில் ஆந்த்ரே ரஸல் இடம்பெற்றுள்ளார்.**

இங்கிலாந்து அணி, மேற்கு இந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டி, 5 சர்வதேச டி20 போட்டிகள் விளையாட வந்துள்ளது. இதில் ஒருநாள் தொடர் நிறைவடைந்துவிட்டது. இந்தத் தொடரை 2-1 என மேற்கு இந்தியத் தீவுகள் அணி வென்று சாதனை படைத்துள்ளது. இதையடுத்து சர்வதேச டி20 தொடர் வரும் 13-ம் தேதி துவங்க உள்ளது.

இந்த தொடரில் பங்கேற்கும் டி20 அணியை மேற்கு இந்தியத் தீவுகள் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ளது. இதில் ஆந்த்ரே ரஸலும் இடம்பெற்றுள்ளார்.

ரஸல், ஐபிஎல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். 67 சர்வதேச டி20 போட்டிகளில் விளையாடி 741 ரன்களும், 112 ஐபிஎல் போட்டிகளில் விளையாடி 2,262 ரன்களும் குவித்துள்ளார் ரஸல்.

மேலும் மேற்கு இந்தியத் தீவுகள் அணியில் முதன்முறையாக மேத்யூ போர்டும் இணைந்துள்ளார். 15 பேர் கொண்ட மேற்கு இந்தியத் தீவுகள் அணி விவரம்: ரோமேன் பாவெல் (கேப்டன்), ஷாய் ஹோப் (துணை கேப்டன்), மேத்யூ போர்ட், ரோஸ்டன் சேஸ், ஷிம்ரன் ஹெட்மயர், ஜேசன் ஹோல்டர், அகில் ஹொஸைன், அல்சாரி ஜோசப், பிரண்டன் கிங், குடகேஷ் மோதி, நிகோலஸ் பூரன், கைல் மேயர்ஸ், ஆந்த்ரே ரஸல், ரூதர்போர்ட், ரொமாரியோ ஷெப்பர்ட்.

# ஸ்டம்ப் சரிந்தும் பெயில்ஸ் விழாததால் விக்கெட் கொடுக்க மறுத்த நடுவர்



**ஆஸ்திரேலியா : டிச. 12,**

**ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் ஸ்டம்ப் சரிந்தும், பெயில்ஸ் கீழே விழாததால், அம்பயர் அவுட் கொடுத்த மறுத்த சம்பவம், கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.**

ஆஸ்திரேலியாவின் கான்பெரா நகரில், உள்ளூர் அணிகளுக்கு இடையேயான ஏசிடி கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் கினிண்டெரா கிரிக்கெட் அணியும், வெஸ்ட் டிஸ்ட்ரிக்ட் கிரிக்கெட் அணியும் விளையாடிக் கொண்டிருந்தன. போட்டியின் போது கினிண்டெரா அணி வீரர், ஆண்டி ரெனால்ட்ஸ் வீசிய பந்து சரியாக நடு ஸ்டம்பில் பட்டு சரிந்தது. இதையடுத்து பேட்டிங் செய்து கொண்டிருந்த மேத்யூ பஸிஸ்டோவ் விக்கெட் விழுந்துவிட்டதாக எண்ணி கிரீஸிலிருந்து வெளியேறினார்.

ஆனால், அப்போது தான் பைல்ஸ் கீழே விழவில்லை என்பதை அவர் பார்த்துள்ளார். இதனால் அம்பையர்களிடம் அவர் முறையிட்டார். இதையடுத்து அம்பையர்கள் நீண்ட நேரம் தங்களுக்குள் விவாதம் நடத்தினர். இறுதியில் கிரிக்கெட் விதிப்படி செயல்படுவது என முடிவு செய்தனர். கிரிக்கெட் விதிப்படி, பந்து ஸ்டம்பில் பட்டால், ஒன்று அல்லது இரண்டு பெயில்ஸும் கீழே விழவேண்டும், அல்லது ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட ஸ்டம்ப்கள் கீழே விழ வேண்டும்.

இந்த விதிப்படி பெயில்ஸ் கீழே விழாததால் மேத்யூ அவுட் ஆகவில்லை என முடிவு செய்து, விக்கெட் அளிக்க மறுத்தனர். இதையடுத்து, மேத்யூ மீண்டும் ஆட்டத்தை தொடர்ந்தார். இதனிடையே இந்த புகைப்படத்தை கிரிக்கெட் ஏசிடியின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள நிர்வாகிகள், "இது போன்ற ஒன்றை நீங்கள் எப்போதும் பார்க்க முடியாது. இது எவ்வாறு நிகழ்ந்தது என ரசிகர்கள் நீங்களே விளக்குங்கள். பௌதீகமா, சூவிங்கம்மா அல்லது மழையில் நனைந்து பெருத்த மரமா?" என்று குறிப்பிட்டுள்ளனர். தற்போது இந்த புகைப்படத்தை தங்கள் சமூக வலைதளங்களில் பகிர்ந்து கிரிக்கெட் ரசிகர்கள் விவாதித்து வருகின்றனர்.

# கவுகாத்தி மாஸ்டர்ஸ் பேட்மின்டன் இந்திய ஜோடிக்கு தங்கம்



**கவுகாத்தி : டிச. 12,**

**யோனக்ஸ் சூப்பர் 100 கவுகாத்தி மாஸ்டர்ஸ் பேட்மின்டன் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஷ்வினி பொன்னப்பா தனிஷா கிராஸ்டோ ஜோடி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.**

இறுதிப் போட்டியில் சீன தைபேவின் சங் ஷுவோ யுன் யு சியென் ஹுய் ஜோடியுடன் நேற்று மோதிய இந்திய இணை 21-13, 21-19 என்ற நேர் செட்களில் வென்று தங்கப் பதக்கத்தை முத்தமிட்டது. இப்போட்டி 40 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது. நடப்பு சீசனில் அஷ்வினி தனிஷா வென்ற 2வது சாம்பியன் பட்டம் இது. முன்னதாக, அபுதாபி மாஸ்டர்ஸ் சூப்பர் 100 தொடரில் இவர்கள் பட்டம் வென்றிருந்தனர். கடந்த வாரம் லக்னோவில் நடந்த சையத் மோடி சூப்பர் 300 பேட்மின்டன் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய அஷ்வினி தனிஷா இணை, பைனலில் ஜப்பானின் இவனகா நகானிஷி ஜோடியிடம் போராடி தோற்று வெள்ளிப் பதக்கம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# ஆக்ஷனில் இறங்கும் லேடி சூப்பர் ஸ்டார்



**ஆந்திரா : டிச. 12,**

**ஆக்ஷனில் கலக்கிய லேடி சூப்பர் ஸ்டார் விஜயசாந்தி மீண்டும் சினிமாவில் அதிரடியாக ஆக்ஷனில் இறங்க உள்ளார். இந்த செய்தி ரசிகர்களை குஷிப்படுத்தியுள்ளது. இதை தனது எக்ஸ் பக்கத்திலும் உறுதிப்படுத்தியுள்ளார்.**

தமிழ், தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் நடிகை விஜயசாந்தி. அப்போதே ஆக்ஷன் காட்சிகள், போலீஸ் கதாபாத்திரம் போன்றவற்றில் நடித்துப் புகழ் பெற்றார். இவரை ரசிகர்கள் லேடி சூப்பர் ஸ்டார் எனக் கொண்டாடினர். சினிமாவில் பிஸியாக இருந்தவர் கடந்த 2006ம் ஆண்டு சினிமாவை விட்டு விலகி அரசியல் களத்தில் குதித்தார். சமீபத்தில் பாஜகவில் இருந்து விலகுவதை அறிவித்த விஜயசாந்தி காங்கிரஸ் கட்சியில் மீண்டும் இணைந்தார். அரசியலில் பரபரப்பாக ஈடுபட்டு வந்தாலும் அவ்வப்போது படங்களிலும் நடித்து வந்தார் விஜயசாந்தி.

இந்த நிலையில், தனது எக்ஸ் பக்கத்தில் ரசிகர்களின் அன்புக்காக விரைவில் படத்தில் நடிக்க இருக்கிறேன் என்பதைக் கூறியுள்ளார். 1979-ல் தனது சினிமா கேரியர் ஆரம்பித்ததில் இருந்து 50 வருடங்களாக இப்போது வரை ரசிகர்களின் அன்பு மாறாமல் இருப்பதாகவும் அது இப்போதும் தொடரும் எனவும் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார். விஜயசாந்தி மீண்டும் நடிக்க வருவதால் ரசிகர்கள் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# அகோரி வேடத்தில் சாயாஜி ஷிண்டே



**சென்னை : டிச. 12,**

**டி.வி நடிகர் சித்து ஹீரோவாக அறிமுகமாகும் திரைப்படம், ‘அகோரி’. இதில் சாயாஜி ஷிண்டே அகோரி வேடத்தில் நடிக்கிறார்.**

அவரது காட்சி ஹரித்துவார் செட் மற்றும் கேரளா காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த செட்டில் படமாக்கப்பட்டன. அவருடன் ஏராளமான அகோரிகள் நடித்தனர். மற்றும் ‘சாஹோ’ ஜக்குல்லா பாபு, ஸ்ருதி ராமகிருஷ்ணன், மைம் கோபி, டார்லிங் மதனகோபால், ரியாமிகா, மாதவி, வெற்றி, கார்த்தி, சரத், டிசைனர் பவன் நடித்துள்ளனர். வசந்த் ஒளிப்பதிவு செய்ய, 4 மியூசிக்ஸ் இசை அமைத்துள்ளது.

மோஷன் பிலிம் பிக்சர் சார்பில் சுரேஷ் கே.மேனன் தயாரிக்க, டி.எஸ்.ராஜ்குமார் எழுதி இயக்கியுள்ளார். சிவனடியாராக இருக்கும் ஒரு அகோரிக்கும், தீய சக்திகளுக்கும் இடையே நடக்கும் போராட்டம்தான் கதை. பி.வி.ஆர் சினிமாஸ் வெளியிடும் இப்படத்துக்கு சென்சாரில் யு/ஏ சான்றிதழ் கிடைத்துள்ளது.

வரலாறு சினிமா

# “வலிமையான கதைகளைப் பேசலாம்” தயாரிப்பு நிறுவனம் தொடங்கிய நடிகை சமந்தா



**சென்னை : டிச. 12,**

**நடிகை சமந்தா புதிய தயாரிப்பு நிறுவனம் ஒன்றை தொடங்கியுள்ளார். இந்தத் தளத்தின் மூலமாக “சமூக கட்டமைப்பில் உள்ள வலிமையானதும், சிக்கலானதுமான கதைகளைப் பேசலாம்” என தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ட்ராலாலா மூவிங் பிக்சர்ஸ் என்கிற என்னுடைய தயாரிப்பு நிறுவனத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். புதிய சிந்தனைகள் அடங்கிய கன்டென்டுகளை முன்னிலைப்படுத்துவதே இதன் நோக்கம். நமது சமூக கட்டமைப்பின் வலிமையானதும், சிக்கலானதுமான தன்மைகள் கொண்ட கதைகளை இந்தத் தளம் ஊக்குவிக்கும். அதேசமயம் படைப்பாளிகள் உண்மையான, அர்த்தமுள்ள உலகளாவிய படைப்புகளை வெளிப்படுத்த இந்தத் தளம் உதவியாக இருக்கும்” என தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் சிறுவயதில் கேட்டு ரசித்த ‘பிரவுன் கேர்ள் இன் தி ரிங் நவ்’ என்ற ஆங்கில பாடலில் இருந்து ஈர்க்கப்பட்டு ‘ட்ராலாலா’ என்ற பெயரை வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். நடிகை சமந்தா மயோசிடிஸ் எனும் தசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு அதற்கான சிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறார். சிகிச்சை காரணமாக நடிப்புக்கு ஒரு சின்ன ப்ரேக் எடுத்துள்ளார். அவர் நடிப்பில் கடைசியாக ‘குஷி’ படம் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# “உங்களுக்கு வேறு வேலை இல்லையா” மன்சூர் அலிகானுக்கு ஐகோர்ட் சரமாரி கேள்வி



**சென்னை : டிச. 12,**

**“நடிகர் மன்சூர் அலிகான் தொடர்ச்சியாக ஏன் சர்ச்சையான செயல்களில் ஈடுபடுகிறார்? எதற்காக அவர் ஊடகங்களை சந்திக்கிறார்? அவருக்கு வேறு பணி இல்லையா?” என்று சென்னை உயர் நீதிமன்றம் சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளது.**

தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக கூறி ரூ.1 கோடி மானநஷ்ட ஈடு கேட்டு மன்சூர் அலிகான் தாக்கல் செய்த வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் இவ்வாறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

நடிகர் மன்சூர் அலிகான் தன்னைப் பற்றி சர்ச்சைக்குரிய வகையில் பேசியதற்கு நடிகை த்ரிஷா தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். இந்த நிலையில், மன்சூர் அலிகானுக்கு தமிழ் திரையுலகினர் பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். மன்சூர் அலிகான் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக டிஜிபிக்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து, பெண்களை இழிவுபடுத்தி பேசுதல் உள்ளிட்ட 2 பிரிவுகளின் கீழ் சென்னை ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் துறையினர் நடிகர் மன்சூர் அலிகான் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

சம்பந்தப்பட்ட மகளிர் காவல் நிலையத்தில் ஆஜராகி மன்சூர் அலிகான் விளக்கம் அளித்தார். இதைத் தொடர்ந்து, ‘எனது சக திரைநாயகி த்ரிஷாவே, என்னை மன்னித்துவிடு’ என்று மன்சூர் அலிகான் அறிக்கை வெளியிட்டார். இதற்கு பதில் அளிக்கும் விதமாக, த்ரிஷா தனது எக்ஸ் வலைதள பதிவில், ‘தவறு செய்வது மனிதம்; மன்னிப்பது தெய்வ குணம்’ என்று குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில், முழு வீடியோவையும் பார்க்காமல் தனது நற்பெயருக்கு களங்கம் கற்பித்ததாக குற்றம்சாட்டி, நடிகை த்ரிஷா, நடிகை குஷ்பு, நடிகர் சிரஞ்சீவி ஆகியோருக்கு எதிராக தலா ஒரு கோடி ரூபாய் மான நஷ்டஈடு கேட்டு நடிகர் மன்சூர் அலிகான் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, மன்சூர் அலிகான் தரப்பு வழக்கறிஞரிடம், “இந்த விவகாரத்தில் நடிகை த்ரிஷா தானே வழக்கு தொடர்ந்திருக்க வேண்டும்? எங்களுக்கு எதுவும் தெரியாது என நினைக்கிறீர்களா? நடிகராக இருக்கும் ஒருவரை பல இளைஞர்கள் தங்களது ரோல் மாடலாக பின்பற்றும் நிலையில் பொது வெளியில் இப்படி அநாகரிகமாக நடந்து கொள்ளலாமா?” என கேள்வி எழுப்பி, பொது வெளியில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென மன்சூர் அலிகானுக்கு அறிவுறுத்துமாறு அவரது தரப்பு வழக்கறிஞர் குரு தனஞ்ஜெயிடம் நீதிபதி கூறினார்.

மேலும், “மன்சூர் அலிகான் தொடர்ச்சியாக இதுபோன்ற சர்ச்சையான செயல்களில் ஈடுபடுகிறார்? எதற்காக அவர் ஊடகங்களை சந்திக்கிறார்? அவருக்கு வேறு பணி இல்லையா? தாம் எந்த தவறும் செய்யவில்லை என தற்போது கூறும் மன்சூர் அலிகான் கைது நடவடிக்கைகளில் தப்பிப்பதற்காகவா நிபந்தனை அற்ற மன்னிப்புக் கோரினார்?” என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த மன்சூர் அலிகான் தரப்பு வழக்கறிஞர், தாம் பேசியது தொடர்பாக முழு வீடியோவையும் தாக்கல் செய்வதாகவும், தம்மை பற்றி எக்ஸ் தளத்தில் பதிவிட்டதை த்ரிஷா நீக்க வேண்டுமென கோரிக்கை வைத்தார். அப்போது நடிகை த்ரிஷா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கே.வி.பாபு, “மன்சூர் அலிகான் மன்னிப்பு கேட்ட நிலையில் இந்த விவகாரம் முடிந்து விட்டது. இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தாமே அமைதியாக உள்ள நிலையில் தற்போது எதற்கு அவர் வழக்கு தொடர்ந்துள்ளார் என தெரியவில்லை” என கூறினார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, மன்சூர் அலிகானின் மனுவுக்கு நடிகைகள் த்ரிஷா மற்றும் குஷ்பு மற்றும் நடிகர் சிரஞ்சீவி ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை டிசம்பர் 22-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# மாறுபட்ட திரில்லர் படத்தில் இவானா



**சென்னை : டிச. 12,**

**இயக்குநர் பாலாவிடம் உதவி இயக்குநராக பணியாற்றிய மந்த்ரா வீரபாண்டியன் இயக்கியுள்ள படம், ‘மதிமாறன்’. ஜி.எஸ் சினிமா இன்டர்நேஷனல் தயாரிக்கும் இதில், இவானா, வெங்கட் செங்குட்டுவன் முதன்மைப் பாத்திரத்தில் நடிக்கின்றனர்.**

இவர்களுடன் ஆராத்யா, எம்.எஸ்.பாஸ்கர், ‘ஆடுகளம்’ நரேன், பவா செல்லதுரை, பிரவீன் குமார், சுதர்சன் கோவிந்த் உட்பட பலர் நடித்துள்ளனர். கார்த்திக் ராஜா இசையமைத்துள்ள இந்தப் படத்துக்கு பர்வேஸ் கே ஒளிப்பதிவு செய்துள்ளார்.

தன்னுடன் இரட்டையராக பிறந்த சகோதரியை, நாயகன் தேடுவதுதான் இதன் கதை. பாடிஷேமிங் எந்த வகையிலும் தவறென்பதையும், இயலாதவர்களின் மீதான சமூகத்தின் பார்வையை கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் இதன் கதை உருவாக்கப்பட்டுள்ளது.

படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாறுபட்ட திரில்லர் டிராமாவாக உருவாகியுள்ள இந்தப் படத்தின் முதல் தோற்றம் வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ளது. பாபின்ஸ் ஸ்டுடியோஸ் நிறுவனம் தமிழகமெங்கும் இந்தப் படத்தை வெளியிட இருக்கிறது.

வரலாறு உலகம்

# டெடி பியர் பொம்மைகளில் ஆயுதங்கள் ஹமாஸின் போர் தந்திரத்தை அம்பலப்படுத்திய இஸ்ரேல்

**இஸ்ரேல் : டிச. 12,**

**டெடி பியர்களில் வெடிகுண்டுகளை மறைத்து வைத்து ஹமாஸ் தாக்குதல் நடத்துவதைக் காட்டும் காணொளிகள் மற்றும் புகைப்படங்களை இஸ்ரேல் பாதுகாப்புப் படை வெளியிட்டுள்ளது.**



பாலஸ்தீனத்தின் காஸாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் தொடங்கி 2 மாதங்களுக்கு மேலாகிறது. போரை ஆரம்பித்தது ஹமாஸ் என்றாலும் தற்போது இஸ்ரேல் தாக்குதலால் பாலஸ்தீன மக்கள் துன்பப்படுகிறார்கள். இதுவரை காஸாவில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 47 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த மற்றும் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பது போரின் நிலையை எடுத்து காட்டுவதாக உள்ளது.

மனித குலத்தின் நலனுக்காகப் போரை நடத்துவதை நிரூபிப்பதற்காக தனது தரப்பிலிருந்து வாதங்களையும், ஆதாரங்களையும் வழங்குவதில் மும்முரமாக உள்ளது. என்ன செய்தாவது ஹமாஸை அழிக்க வேண்டும் என்று நினைக்கும் இஸ்ரேல், ஹமாஸ் பொது மக்களை கேடயமாக பயன்படுத்துவதாக கூறுகிறது.

அதை நிரூபிக்கும் வகையில் டெடி பியர்களில் வெடிகுண்டுகளை மறைத்து வைத்து ஹமாஸ் தாக்குதல் நடத்துவதைக் காட்டும் காணொளிகள் மற்றும் புகைப்படங்களை இஸ்ரேல் பாதுகாப்புப் படை தற்போது வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் தொடர் குண்டுவெடிப்புகளை நடத்தும் இஸ்ரேலுக்கு கண்டனங்கள் வலுத்து வரும் சூழலில், ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோவும் இஸ்ரேல் மீது தொடர் குண்டுவெடிப்புக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

காஸாவில் மனிதாபிமான உதவிகள் முற்றிலுமாக நிறுத்தப்படும் அபாயம் இருப்பதாக ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ பாதுகாப்பு கவுன்சிலில் தெரிவித்தார். ஹமாஸ் தாக்குதலுக்கு தண்டனையை பாலஸ்தீனத்தின் பொது மக்களுக்குக் கொடுப்பது தவறானது என்று அன்டோனியோ கூறினார். இதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஐநா மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் பயனளிக்கவில்லை என்பதால் கவலைகள் அதிகரித்துள்ளன.

# ஹமாஸ் எச்சரிக்கை : கோரிக்கைகள் நிறைவேறும் வரை, பிணைக்கைதிகள் உயிரோடு திரும்ப மாட்டார்கள்

**காசா : டிச. 12,**

**இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான தொடரும் மோதலில் ஹமாஸ் புதிய எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.**



இஸ்ரேல் மீதான ஹமாஸ் ஆயுதக் குழுவின் அக்.7 தாக்குதலில் சுமார் 1,400 பேர் இஸ்ரேலில் கொல்லப்பட்டனர். இதனையடுத்து ஹமாஸ் அமைப்பினரை வேரறுக்கும் தீர்மானத்தோடு இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் காசா மீது போர் தொடுத்தது. முதலில் வான்வழித் தாக்குதல் பின்னர் தரைவழித் தாக்குதல் என காசாவில் இஸ்ரேல்ராணுவம் ஊடறுத்து வருகிறது. இந்த தாக்குதலில் காசாவின் சுமார் 17 ஆயிரம் பேர் இதுவரை பலியாகி உள்ளனர். இவர்களில் சுமார் 40 சதவீதம் பேர் குழந்தைகள் மற்றும் சிறார் ஆவர்.

காசாவில் தாக்குதலை தொடர்ந்து வரும் இஸ்ரேல் ராணுவத்தினரின் பிரதான நோக்கம், ஹமாஸ் வசமிருக்கும் பிணைக்கைதிகளை மீட்பது ஆகும். அக்.7 தாக்குதலின்போது, இஸ்ரேலில் இருந்து சுமார் 240 பேர்களை ஹமாஸ் காசாவுக்கு கடத்திச் சென்றது. இஸ்ரேலியர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களையும் உள்ளடக்கிய இந்த பிணைக்கைதிகளில் கணிசமானோர், தற்காலிக போர் நிறுத்தத்தின்போது விடுவிக்கப்பட்டனர்.

ஹமாஸ் - இஸ்ரேல் இடையிலான கைதிகள் பரிமாற்ற நடவடிக்கை 1:3 என்ற விகிதத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வகையில் ஹமாஸ் 80 பிணைக்கைதிகளை விடுவிக்க, இஸ்ரேல் 240 சிறைக்கைதிகளை இதுவரை விடுவித்துள்ளது. அதானையடுத்து போர் தாக்குதல் மீண்டும் தொடங்கியதில், இம்முறை தெற்கு காசாவை இஸ்ரேல் குறிவைத்து தாக்கி வருகிறது.

வடக்கு காசா மீதான தாக்குதல் காரணமாக, தெற்கு காசாவுக்கு இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் இதனால் பெரும் பாதிப்புக்கு ஆளானார்கள். ஹமாஸ் அமைப்பினர் என்ற குற்றச்சாட்டில், அப்பாவி பாலஸ்தீனியர்கள் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்படுவதாக ஹமாஸ் குற்றம்சாட்டி உள்ளது.

இதனிடையே கோரிக்கைகள் நிறைவேறும் வரை தங்கள் வசமிருக்கும் பிணைக்கைதிகள் எவரும் உயிரோடு திரும்ப மாட்டார்கள் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஹமாஸ் ஆயுதக்குழுவின் செய்தி தொடர்பாளரான அபு ஒபையா என்பவர், "இஸ்ரேலிய படையுடனான எங்களது யுத்தம் தொடரும். ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக தெருக்கள் தோறும் சண்டை போடுவதைத் தவிர வேறு வழியில்லை. எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை எந்தவொரு பிணைக்கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள். எங்களது புனிதப் போர் தொடரும்" என்று அறிவித்துள்ளார்.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் கடைசிக்கட்டத்தை எட்டியுள்ள சூழலில், ஹமாஸ் வசமிருக்கும் பிணைக்கைதிகள் உயிருக்கு எழுந்துள்ள அச்சுறுத்தல் இருதரப்பு இடையிலான சிக்கலை அதிகரித்துள்ளது.

# கால்பந்து மைதானத்தில் பெய்த பொம்மை மழை ரசிகர்களின் செயலுக்கான ரகசியம் இதுதான்

**ஸ்பெயின் : டிச. 12,**

**ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற கால்பந்து போட்டியின் இடைவெளியில் தாங்கள் கொண்டு வந்திருந்த பொம்மைகளை வீசி ரசிகர்கள் மைதானத்தை நிறைத்துள்ள சம்பவம் உலகினர் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**



கால்பந்தில் உச்சபட்ச தொடர்களாக இங்கிலாந்தில் நடைபெறும் பிரீமியர் லீக் தொடரும், ஸ்பெயினில் நடைபெறும் லாலிகா தொடரும் திகழ்ந்து வருகிறது. இந்த லா லிகா தொடர் ஸ்பெயினின் பல்வேறு பகுதிகளில் தற்போது நடந்து வருகிறது. இந்த லா லிகா தொடரில் பங்கேற்கும் முக்கிய அணிகளில் ஒன்று ரியல் பெட்டிஸ். இந்த அணியின் சொந்த மைதானமான எஸ்டேடியா பெனிட்டோ வில்லமரின் மைதானத்தில் கிறிஸ்துமஸ் தினத்துக்கு முன்னர் இறுதியாக நடைபெறும் போட்டிகளில் ஒரு மரபு பின்பற்றப்படுகிறது.

அதாவது கிறிஸ்துமஸ் தினத்தை கொண்டாட வசதி இல்லாத ஏழை குழந்தைகளுக்கு அளிக்கும் வகையில் கிறிஸ்துமஸ் தினத்துக்கு முன்னர் இறுதியாக இந்த மைதானத்தில் நடைபெறும் போட்டியில் ரசிகர்கள் தாங்கள் கொண்டுவரும் பொம்மைகளை மைதானத்தில் வீசுவர். இந்த பொம்மைகள் ஏழை குழந்தைகளுக்கு அளிக்கப்படும்.

அந்த வகையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை எஸ்டேடியா பெனிட்டோ வில்லமரின் மைதானத்தில் ரியல் பெட்டிஸ் - ரியல் சோசைடட் அணிகள் மோதிய ஆட்டத்தின் இடைவேளையின் போது, ரசிகர்கள் தங்கள் கொண்டு வந்திருந்த பொம்மைகளை மைதானத்தில் தூக்கி வீசினர். இந்த வகையில் சுமார் 19,000 பொம்மைகள் கிடைத்துள்ளதாக ரியல் பெட்டிஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

35 சென்டிமீட்டருக்கும் குறைவாகவும் பேட்டரிகள் இல்லாதவாறும் உள்ள பொம்மைகளை மைதானத்துக்கு கொண்டுவருமாறு ரியல் பெட்டிஸ் அணி நிர்வாகம் ரசிகர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையில், இது தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# பணவீக்கம், வறுமை, வேலைவாய்ப்பின்மை சவால்களை சமாளிப்பாரா

## அர்ஜென்டினா அதிபராக பதவியேற்ற ஜேவியர் மிலி

**ப்யூனஸ் அயர்ஸ் : டிச. 12,**

**அர்ஜென்டினா நாட்டின் அதிபராக பொருளாதார நிபுணரான ஜேவியர் மிலி பதவியேற்றார். அர்ஜென்டினா கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ள நிலையில் நடந்த தேர்தலில் ஜேவியர் அபார வெற்றி பெற்றுள்ளார்.**



பதவியேற்புக்குப் பின்னர் பேசிய அதிபர் ஜேவியர் மிலி கூறுகையில், "இறைவன் மீதும், என் தேசத்தின் மீதும் ஆணையாக நான் இந்த அதிபர் பதவியில் உண்மையுடன், தேசபக்தியுடன் செயல்படுவேன். முந்தைய ஆட்சியாளர்கள் கஜானாவை காலி செய்துவிட்டுச் சென்றுள்ளனர். அவர்களின் நடவடிக்கையால் நாடு அதிதீவிர பணவீக்கத்தை சந்தித்துள்ளது. அரசாங்கத்திடம் பணம் இல்லை. நிதி சீர்திருத்தம் தான் இப்போதைய தேவை. ஆனால் அதன் பலன்கள் அரசாங்கத்துக்கு வர வேண்டும். தனியார் துறைகள் ஆதாயமடையும் வகையில் இருக்கும்படியான சீர்திருத்தங்களாக இருந்துவிடக் கூடாது" என்றார்.

அர்ஜென்டினாவின் பணவீக்கம் மூன்று இலக்கத்தில் உள்ளது. அங்கு தற்போது 40 சதவீத மக்கள் வறுமையில் உள்ளனர். 1.8 கோடி பேர் தங்களின் தனிப்பட்ட தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளனர். 10 சதவீத மக்கள் உணவுக்குக்கூட வழியிலாது மோசமான வறுமையில் உள்ளனர். நாட்டில் வேலைவாய்ப்பின்மை 6.2 சதவீதமாக உள்ளது. கடுமையான பணவீக்கம், நாணய மதிப்பு சரிவு என அர்ஜென்டினா கடுமையான நிதிச் சுழலில் சிக்கியுள்ள சூழலில் ஜேவியரின் பதவியேற்பு அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜேவியருக்கும் கடுமையான சவால்கள் காத்திருக்கின்றன.

# இலங்கையை அச்சுறுத்தும் டெங்கு

## 80 ஆயிரம் பேர் பாதிப்பு – 47 பேர் மரணம்




**இலங்கை : டிச. 12,**

**இலங்கையில் தொடர்ந்து அதிகரித்து வரும் டெங்கு பாதிப்பால் இதுவரை 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

இலங்கையில் டெங்கு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு புள்ளிவிவரம் வெளியிட்டுள்ளது. டெங்கு பாதிப்பு கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருவதையடுத்து, இலங்கையில் டெங்கு பாதிப்பு உச்சத்தைத் தொட்டுள்ளது. டிசம்பரில் மட்டும் இதுவரை 3,704 பேருக்கு டெங்கு பாதிப்பு பதிவாகியுள்ளன.

இலங்கையில் நேற்று முன்தினம் ஞயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி மொத்தம் 80,192 பேருக்கு டெங்கு பாதிக்கப்பட்டுள்ளது. டெங்கு பாதித்து 47 பேர் இதுவரை பலியாகியுள்ளனர். மேற்கு மாகாணத்தில் 46.4 சதவீதத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்கு மாகாணத்தில் 46.4 சதவீதத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# ஈரான் சிறையில் உள்ள தாய் நர்கிஸ் சார்பில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற குழந்தைகள்

**ஓஸ்லோ : டிச. 12,**

**ஜெர்மனியின் ஓஸ்லோ சிட்டி ஹாலில் நோபல் பரிசு வழங்கும் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.**



இந்த ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு ஈரான் சமூக ஆர்வலரும், பெண்களின் உரிமை மற்றும் சுதந்திரத்துக்காக போராடி வரும் நர்கீஸ் முகமதுக்கு அறிவிக்கப்பட்டது. கடந்த 2021-ல் நர்கீஸ் முகமதுவை ஈரான் அரசு கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. இதையடுத்து, அமைதிக்கான நோபல் பரிசை அவர் நேரடியாகபெற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக, நர்கீஸின் இரட்டை குழந்தைகள் 17 வயதான அலி மற்றும் கியானி ஆகியோரிடம் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அதற்கு முன்னதாக கியானி செய்தியாளர்களிடம் கூறுகையில், "பெண்களின் சுதந்திரத்துக்காக போராடுவது மதிப்புக்குரிய விசயம். வெற்றியை மட்டுமே நம்பி நாம் இந்த போராட்டங்களில் ஈடுபட வேண்டும். ஏனெனில் இது விலைமதிப்பற்றது. நோபல் பரிசு அறிவிக்கப்பட்டதற்காக எனது தாயாரின் சுதந்திரத்தை ஈரானிய அதிகாரிகள் மேலும் பறிக்ககூடும். எங்களது அம்மாவை நாங்கள் இறுதிவரை சந்திக்க முடியாமல் கூட போகலாம். ஆனால், அவர் என்றும் எங்கள் இதயத்தில் இருப்பார் என்றார்.

நர்கீஸின் மகன் அலி கூறுகையில் வெற்றி என்பது எளிதானது அல்ல. அது உறுதியானது. எனது தாயாரின் போராட்டம் உன்னதமானது என்றார். ஈரான் அரசின் கெடுபிடிகளால் 2015-ம் ஆண்டு முதல் பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் முகமதியின் இரட்டை குழந்தைகள்கள் 9ஆண்டுகளாக தாயாரை சந்திக்கவில்லை.

# கடற்கரையில் லட்சக்கணக்கில் செத்து மிதந்த மீன்கள்



**ஹொக்கைடோ : டிச. 12,**

**வடக்கு ஜப்பான் ஹொக்கைடோ தீவு பகுதியில் உள்ள ஹகோடேட் கடல் பகுதியில், திடீரென லட்சக்கணக்கான மீன்கள் இறந்தன. இதனால் கடற்கரை முழுவதும் மீன்கள் மயமாக காட்சியளித்தது. இது உலக நாடுகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

ஜப்பானின் வடக்கே பிரதான தீவான ஹொக்கைடோவில் உள்ள ஹகோடேட்டில் லட்சக்கணக்கான மீன்கள் செத்து கரை ஒதுங்கின. சுமார் அரை மைல் நீளமுள்ள கடற்கரையில் உள்ளூர்வாசிகள் செத்து மிதந்த மீன்களைச் சேகரித்துச் சென்றனர். எனினும் அவற்றை சாப்பிட வேண்டாம் என ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்தனர்.

திடீரென இவ்வளவு மீன்கள் இறந்ததற்கான காரணம் தெரியாமல் அதிகாரிகள் விசாரணையில் இறங்கினர். விசாரணையில் ஃபுகுஷிமா அணு உலையில் இருந்து கதிர்வீச்சு கலந்த தண்ணீர் கடலில் கலக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவாக இருக்கக் கூடும் என சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கிடையே, சம்பவ இடத்துக்கு சென்ற மீன் ஆராய்ச்சியாளர்கள் மாதிரிகளை சேகரித்து ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஆய்வு முடிவு வெளியான பிறகே, மீன்களின் உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும். கடந்த அக்டோபர் மாதம் ஃபுகுஷிமா அணு உலையில் இருந்து கழிவுநீர் கடலில் கலக்கப்பட்டது. இந்த நிலையில் அணு உலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளால் கடல் வாழ் உயிரினங்களுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்கு அது பிரச்சினையான ஒன்றுதான். அதனால் அணு உலைகள் எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் இது பிரச்சினைக்குரிய விஷயம் என்பதால் அனைத்து நாடுகளுமே கருத்தில் கொள்ள வேண்டும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# இந்தியாவை அச்சுறுத்தும் சீனாவின் போலி பூண்டு

**சீனா : டிச. 12,**

**சீனாவிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவும் போலிகளின் வரிசையில் தற்போது, இந்தியர்களின் வயிற்றிலடிக்கும் வகையில் போலி பூண்டுகளும் நுழைந்திருப்பது புதிய அச்சுறுத்தலாக மாறி உள்ளது.**



அச்சு அசல் போலவே தோற்றமளிக்கும் சீனாவின் எலெக்ட்ரானிக் உபகரணங்களை அறிந்திருப்போம். சல்லிசான விலையில் கிடைக்கும் சீனத்து ஸ்மார்ட் போன்களும் அவற்றின் பயன்பாடுகளும் இந்தியர்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்ட ஒன்று. எலெக்ட்ரானிக் பொருட்கள் மட்டுமல்ல பிளாஸ்டிக் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களிலும் சீனாவின் கைங்கர்யம் இருந்தது. இந்த வரிசையில் அண்மையில் இந்தியர்களை அலற வைத்திருக்கிறது சீனாவின் போலிப் பூண்டு.

சீனாவின் போலி பூண்டுக்கு எதிராக சர்வதேச அளவில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்த பிறகே தாமதமாக இந்தியா கண் விழித்திருக்கிறது. அன்றாட சமையலில் தவிர்க்க முடியாதது மட்டுமன்றி, அதன் மருத்துவ குணங்களுக்காகவும் பூண்டு போற்றப்படுகிறது. ஆனால் அதிலும் போலியை புகுத்தியிருக்கிறது சீனா.

உலகளவில் பூண்டினை அதிகம் ஏற்றுமதி செய்யும் நாடாக விளங்கும் சீனா, லாப வெறியில் பூண்டு மகசூலில் பல அபாயகரமான மற்றும் அசூயையூட்டும் நடவடிக்கைகளில் இறங்கியது. மனிதக் கழிவுகளை பயன்படுத்தி சீனா பூண்டுகளை சீனா விளைவிப்பதற்கு எதிராக அமெரிக்காவின் செனட்டர்கள் கொதித்தபோதே உலகம் திரும்பிப் பார்த்தது.

அடுத்தபடியாக, பூண்டு போலவே இருக்கும் பூண்டு அல்லாத விளைபொருட்களை கலந்து விற்க ஆரம்பித்தது. பூண்டின் நிறத்துக்காக அவற்றை குளோரின் உள்ளிட்ட கடுமையான வேதிப்பொருட்களால் ப்ளீச் செய்தது. சீனாவிலிருந்து பூண்டு இறக்குமதி செய்யும் நாடுகள் மேற்கொண்ட பரிசோதனையில், சீனப் பூண்டு அதற்கான இயற்கை குணநலன் ஏதும் இல்லாதது கண்டு அதிர்ச்சி அடைந்தார்கள். இந்த போலி பூண்டினை உட்கொள்வதால் உடல் நல அபாயங்கள் அதிகரிக்கும் என்றும் எச்சரித்தார்கள்.

மேலும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பூண்டில் அபாயகரமான ரசாயனங்கள் மற்றும் ஈயம் போன்ற கன உலோகங்கள் இருப்பதாக மருத்துவ அறிக்கைகள் வெளியாயின. பூண்டுக்கான கவர்ச்சியான தோற்றத்தை உருவாக்குவதற்காக, குளோரின் கொண்டு ப்ளீச் செய்யப்படுவது குறித்தும் அபாய சங்கு ஊதியிருக்கிறார்கள். பூண்டுக்கான தனித்துவ மணம் இல்லாததால், அவற்றுக்கான செயற்கை ரசாயனங்களையும் உபயோகிக்கிறார்கள். இதனையடுத்தே கடுமையான தரக் கட்டுப்பாடு மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வுக்கான அறைகூவல்களை சீன பூண்டுக்கு எதிராக உலக நாடுகள் விடுத்துள்ளன.

நுகர்வோர் உஷாராக சீனப் பூண்டினை நேரடியாக தவிர்த்தபோதும், பூண்டு மசாலா, பூண்டு விழுது பெயரிலும், உடைத்த பூண்டு விற்பனையிலும் நுகர்வோர் சரிபார்க்க முடியாத வகையில் அவர்களை மறைமுகமாக சீன ஆபத்து சூழ்ந்து வருகிறது. இவற்றுக்கு அப்பால் சீனத்துப் பூண்டின் ஆக்கிரமிப்பால், இந்தியாவின் பூண்டு விவசாயிகள் நட்டமடைந்து வருவதும் தனியாக நடக்கிறது.

நுகர்வோருக்கு அடுத்தபடியாக, உள்ளூர் பூண்டு விளைச்சல் மற்றும் வர்த்தகத்தை நம்பியிருக்கும் விவசாயிகள் மற்றும் வணிகர்களின் வயிற்றிலும் அடித்து வருகிறார்கள். அரசாங்கம் விழித்துக்கொண்டு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே சீனாவிலிருந்து வரும் போலி பூண்டுக்கு எதிரான நடவடிக்கை முழுமை பெறும்.

# இத்தாலியில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதல் காயத்துடன் உயிர் தப்பிய பயணிகள்



**பாயின்சா : டிச. 12,**

**இத்தாலியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் 17 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர்.**

வடக்கு இத்தாலியின் பாயின்சா - ஃபோர்லின் நகரங்களுக்கு இடையே முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு அதிவேக ரயிலும், பிராந்திய ரயிலும் நேருக்கு மோதிக்கொண்டன. இந்த விபத்தில் 17 பயணிகள் படுகாயமடைந்துள்ளதாக மீட்பு பணியில் ஈடுபட்ட தீயணைப்பு துறையினரும், ரயில்வே துறையினரும் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து குறித்து அந்நாட்டு ரயில் சேவையை இயக்கும் ட்ரெனிட்டாலியா செய்தி தொடர்பாளர் கூறுகையில், "ரயில்கள் மிகவும் மெதுவாக வந்து மோதிக்கொண்டதால் மிகப்பெரிய சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. தற்போது 17 பயணிகளுக்கு சிறிய அளவிலான காயங்களே ஏற்பட்டுள்ளன. ரயில்கள் மோதிக்கொண்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது" என்றார்.

இந்த ரயில் விபத்தில் தீயணைப்பு துறையினர் வெளியிட்டுள்ள புகைப்படத்தில் இரு ரயில்களின் இன்ஜின்கள் சேதமடைந்துள்ளன. குறிப்பாக விரைவு ரயில் இன்ஜின் மோதியதில் பிராந்திய ரயிலின் இன்ஜின் கடுமையாக சேதமடைந்துள்ளது.

இத்தாலி துணை பிரதமரும், போக்குவரத்துத் துறை அமைச்சர் மெட்டோ சால்வினோ கூறுகையில், "ரயில் விபத்துக்கு பிறகு நிலைமையை கண்காணித்து வருகிறேன். விபத்துக்கான காரணம் குறித்து அறிக்கை கேட்கப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் கடந்த ஆகஸ்ட் 31ம் தேதி, மிலன் - துர்னின் இடையே இரவு நேரத்தில் பராமரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த 5 ரயில்வே ஊழியர்கள், ரயில் மோதி உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.



# ஜம்மு காஷ்மீருக்கான 370 சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டது செல்லும் : உச்சநீதிமன்றம்

# பொதுமக்கள் மீது தாக்குதல் : எம்எல்ஏ-வை கைது செய்ய ராமதாஸ் வலியுறுத்தல்





# தேமுதிக தலைவர் விஜயகாந்த் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்


சென்னை / புதுக்கோட்டை | 12.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சௌகார் ஜானகி , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1931)



சரத் பவார் , இந்திய அரசியல்வாதி (பி.1940)



ரஜினிகாந்த் , தென்னிந்திய நடிகர், தயாரிப்பாளர் (பி.1950)



யுவராஜ் சிங் , இந்தியத் துடுப்பாட்ட வீரர் (பி.1981)



## இன்றைய நினைவு நாள்

மைதிலி சரண் குப்த் , இந்தியக் கவிஞர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1866) (இ.1964)



ஜேம்ஸ் ராம்ஸ்போதம் , யாழ்ப்பாணம் யோகசுவாமிகளின் துறவுச் சீடர் (பி.1915) (இ.2004)



நித்தியானந்த சுவாமி , உத்தராகண்ட மாநிலத்தின் 1-வது முதலமைச்சர் (பி.1927) (இ.2012)

